"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

28 MAR 1906

பூலோகவியாசன்.

பிரதி யாதமும் பிரசூரஞ் செய்யப்படும்.

தொகுதி 3.] சென்னை 1906ஞு பெப்ரவரிமீ 20உ. [பகுதி 5.

உ

திருவருட்சகாயம்.

திருக்குருகூர் - ஸ்ரீமத் - ஞானசித்தமூர்த்திகள்

திருவாய்மலர்ந்தருளிய

வெண்பா.

மேலோக மாதிபுகழ் மிக்கோர்சொன் னூல்வழிச்செல்
பூலோக வியாசப் புத்திரநின்—கோலா
கலங்கண்டே னின்வழியே காசினியோர் பேறுப்
பலந்தந்தே யாளும் பரை.

சித்நாந்தப் பிரகாசம்.

(89-ம் பக்கத் தொடர்ச்சி)

அகங்கார தத்துவமானது விளக் கீடாக வுடம்பிலே நிற்கும் பிராணவாயுவையுஞ் செலுத்தி மமதைக்கு மூலமாய், என்னை யொப்பார் யாருமிந்த பிறர் புவியில் ஒருவருமில்லை யென்னும் இயல்பினையுடையதாய், இந்திரியங்களும்விடயங்களும்புசிக்கவும் புசிக்கப்பட்டவுமாக நின்றவளவிலே அவ்விடயத்திலே மூற்பட்டுப் பொருந்துகின்ற இச்சைதானே வடிவாகநிற்கும். இவ்வகங்காரமானது சீவனம் சங்கற்பம் கருவமென மூன்றாம் அவற்றுள் சீவனமாவது பிராணாதி வாயுவினாலே அன்னபானாதிகளைக் கிருகிக்கை. சங்கற்பமாவது எவற்றினும் பிரவர்த்திப்பிக்கை. கருவமாவது யானல்லதில்லை யென்கை. புத்தியும் அகங்காரமும் நிச்சயிக்கும் வியாபாரத்தா லொக்குமாதலிற் புத்தியொன்றே அமையாதோவெனிற் புத்தியானது கிருகிக்கப்படும் விடயங்களை வெகுமுகமாக அறுதியிடுவதாக விருக்கும். அகங்காரம் புத்தியாலே புறம்பே நிச்சயித்துக் கிருகிக்கப்பட்ட விடயங்களை உள்ளே ஆன்மாவினிடத்திலேகூடி நான் செய்தேனென்று நிச்சயம்பண்ணி நிற்கும். மனத்தத்துவமானது ஒன்றைச் சங்கற்பிக்கையும் அனவரத சலனத்துவமும் தந்து நிற்கும், மனமிருவகைப்படும் என்று உள்ளே சங்கற்ப விகற்பங்களைப் பண்ணும், ஒன்று புறம்பே நின்று இந்திரியகட்கும் விரகைக் கொடுக்கும். சித்தமானது நினைவுமாத்திரமே. ஞானேந்திரிய மென்றும் கன்மேந்திரிய மென்றும் முன்னம் சொன்னவாறே செவிமுதல் ஆக்கிராண மீறாக இந்திரியங்கள் ஐந்துக்கும் விடயங்களாக நிலைபெற்ற சத்தமுதற் கந்தமீறாகிய இவை யடைவே பொருந்தும். வாக்குப் பாதம் எண்ணுங்காற் பின்வருகின்ற பாணிபாயுவுடன் உபத்தமாகச் சொல்லுகின்றஐந்திற்கும் ஓசைபொருந்திய வசனமுதல் ஆனந்தமீறாகவுற்றவிடயமாகிய ஐந்தும்அடைவிலேபெறுகின்றது இயல்பாம்.

இனிச்சாருவாகரும் நியாயவைசேடிகரும் சோத்திராதி யைந்தும் ஒவ்வொரு விடயங்களைக் கிரகிக்கையினாலே அவ்விடயங்கள் பூதங்களின் குணமாகையினாலே பூதங்களே நின்று சத்தாதிகளைக் கிரகிக்கும் அத்தனையே ஞானேந்திரியம் வேண்டாவென்று சொல்லுவர். பூதங்களே இந்திரியங்களாயின் தத்தங்குணங்களொன்றையுமே யறியவேண்டும். அப்படியன்றி இந்த விந்திரியங்கள் அன்னிய பூதங்களையும் அவற்றின் குணங்களையும் போக்கு வரவான கன்மங்களையும் 'ஆவுண்டு' என்பது போலுஞ் சாதிகளையும் குணகுணிகளுடைய நிமித்த சம்பந்தங்களையும் அறிகையாலே ஞானேந்திரியம் பூதகாரியமன்று. இனிவசனாதி கிரியைகளைச் செய்கையாலே கன்மேந்திரியமுண்டு. இஃதின்றேல் ஒரு தொழிலுங்கூடாது. ஆனால், தொழிலுக்குக் கன்மேந்திரிய மேதுவேற் புருவமுதலிய வுறுப்புகள் துடித்தல் தொழிலன்றே. அத்தொழிற்கு இந்திரியமுண்டாகவேண்டும். அப்போதிந்திரியம் பலவென்றீயென்று உலகாயதன் சொல்லில், துவக்கிந்திரியம் சர்வாங்கமும் வியாபித்து நிற்குமாபோல எல்லாவிந்திரியங்களும் உடலெங்கும் வியாபித்து நிற்கும். அன்றிப்பாணிக்குத்தானமே தொழிலாயிருக்க முடவனொருவன் கையானடக்கும். காலிரண்டும் பாதவிந்திரியமின்றிக் கன்மக்கிரியை நிகழாது. ஆதலாலே புருவமுதலிய துடிக்குந்தொழில்களெல்லாம் பாணிமுதலியவற்றின் வியாபாரமென்றறிக. இவை தொழிலுடன் கூடியிருக்கையாலிராசதகுணஞ் சேர்ந்தது.

தத்துவங்கள் எண்ணுங்கால் சூக்கும பஞ்சபூதங்களும் ஆகாய முதலாக் கொண்டு, சோத்திரம், தொக்கு, சட்சு, சிகுவை, ஆக்கிராணமென்று சொல்லப்பட்ட ஞானவிந்திரியமைந்தும் அடைவே பொருந்துதற்கு ஆதாரமாக இந்த விந்திரியங்களிடத்திலே நிலைபெற்றுவரும ஐந்துபுலன்களையும், ஆன்மாக்கள் அனுபவிக்கும்படி. தங்கள் சொரூபத்தோடே விளங்காநிற்கும். புறம்பே (தூலபூதங்களிலே) ஆகாயமானது மற்றைப் பூதங்களெல்லாம் தன்னிடத்திலே வந்தடைய வெளியாயிடங்கொடாநிற்கும். வாயுவானது மிகவுஞ் சலனமா யெல்லாவற்றையும் திரட்டா நிற்கும். தேயுவானது பிறபொருட்கும் வெப்பத்தைக் கொடுத்து அவற்றைச் சுட்டொன்று படுத்தும். அப்புவானது குளிர்ந்த பதங்கொடுத்து நிற்கும். முந்திய பிருதிவியானது கடினமாயெவற்றையுந்தரியா நிற்கும். இங்ஙனஞ் சொல்லிவந்த வடைவிலே சிவதத்துவமைந்துஞ் சுத்ததத்துவம். வித்தியாதத்துவங்களேழும் சுத்தாசுத்த தத்துவம். ஆன்மதத்துவம் இருபத்து நாலும் அசுத்ததத்துவம். இவை மூன்றுக்கு மடைவே பிரேரககாண்டம், போககாண்டாம், போக்கிய காண்டமென்றுரைக்கப்படும். இந்தத்தத்துவங்களிடத்திலே மயங்கிப் பெரியதுன்பங்களைப் பொருந்தப்பட்டசரீரமானது நிலைகுலையக்கூடும்பொழுது பாம்பும் முட்டையிற் செனித்தவையும் கருவிற்கேற்ற வுடலும் போகின்றபடியே, அதோமாயாசிருட்டி சொல்லுதற்கு வருங் கலைமுதலிய முப்பது தத்துவங்களின் விரிதற்கிடமான சூக்குமமாகிய தனக்குரிய புரியட்டகத்தோடே நல்வினை தீவினைக் கீடான பூதசார பூதசரீரங்களிலே பொருந்திச் சுவர்க்கநரகங்களின் பயனை அனுபவித்தே சிவானுக்கிரகத்தாலே பூமியின்கண் மீண்டு பூதபரிணாம வுடலோடே பிறக்குமென்று சுருதிகள் சொல்லும்.

பூதம் ஐந்து, தன்மாத்திரை ஐந்து. ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, அந்தக்கரணம் மூன்று, குணம் ஒன்று, அதற்குக் காரணமான பிரகிருதி ஒன்று, கலாதி ஐந்து, ஆக எட்டுங் கொத்தாதவிற் புரிய

ட்டகமாயிற்று. பாம்பு தூலவுடல் விட்டுச் சூக்குமவுடலோடு போதற்கும், முட்டை முன் பழகின வுடலைப் பராமற் போதற்கும், கனவு தூலதேகத்திற் செய்தகாரியத்தைச் சூக்குமதேகத்திலறியாமைக்கு மூவமையாயின. வித்தியாதத்துவங்களைச் சுத்தா சுத்தமென்றது ஆன்மாக்களுக்குச் சிற்றறிவை விளக்குதற்குச் சாதனமாகையாலும், சூக்குமரூபத் துவாரத்தால் குணரூபமான சுகதுக்கமோகங்களை யுண்டாக்குதற்குச் சாதனமாகையாலுமாம்.

முட்டையிற் செனிப்பவைகள், வியர்வையிற் செனிப்பவைகள், வித்திற் செனிப்பவைகள், பையிற் செனிப்பவைகளாகிய நால்வகைத் தோற்றத்தின்கண் தாபரயோனிகள் பத்தொன்பது நூறுயிரபேதமென்றும், ஊர்கின்றவை பதினைந்து நூறுயிரபேதமென்றும், தேவயோனி பதினொரு நூறுயிரமென்றும், நீர் வாழ்சாதிகள், பட்சிகள், மிருகங்கள் ஒவ்வொன்றும் பத்து நூறுயிரபேதமென்றும் மானிடயோனி ஒன்பது நூறுயிரபேதமென்றும், ஆக எண்பத்து நான்கு நூறுயிரபேதங்களென்னப்படும். (வரும்.)

சித்தாந்த சரபம்.

உலகர் புராணசார சங்கிரகம்.

(93-ம் பக்கத் தொடர்ச்சி.)

(5) சமஷ்டியில் வியஷ்டியாஞ் சரீரம் நிலையெனச் சாஸ்திரமோதி சத்திய நினைவால் (6) மனைவயலழியா மாட்சிமைப் பொருளென்றனைவருமோர்ந்து அடக்கஞ் செய்வர். (7) சரீரம் நிலைக்கத் தவஞ்செயும் பித்தர் சரீரமழியத் தட்டழிகின்றனர்; நமது முன்னோர் சரீரத்தினிடம் அன்புடையவராயிருந்தும் "நீர் மேற்குமிழி" போலும்; "நீர் மேலெழுத்து" போலும்; காயம் நிலையுள்ளதல்லவென்று கைவிட்டனர். இஃதனறி சித்தர்களுக்குத் தலைவராகிய விஷ்ணுவே பத்து அவதாரமெடுத்து சரீரம் நிலையுள்ள தல்லவென்று கைவிட்டனர். சாக்ஷியாக கிருஷ்ணாவதாரத்தில் அவர் சரீரம் நசித்தபோது மஹாநதியில் வைத்து தகனம் செய்ய அச்சரீரம் கொஞ்சம் வெந்தும் வேகாதிருப்பதற்கு முன், வெள்ளம் வந்து அடித்துப்போய் ஜகந்நாதக்கரையில் சேர்க்க அவ்வூரிலுள்ளவர் அச்சரீரத்தை யெடுத்து ஓரிடம் அடக்கம் செய்து அதின் மீது கிருஷ்ணவிக்கிரம் அமைத்துப்பூஜை செய்து வருகிறார். என்றதை நல்லோர் சொல்லக்கேட்டு சரீர அபிமானம் விடயோசிக்கின்றனர். உடனே "உடம்பு காப்பது உலகர் காரியமென்று" பெண்கள் உபதேசம் கேட்டு; (8) சங்கடம் நேர்ந்துழி சாமியைத்தேடுவர், சங்கடம் தீர்ந்தால் சாமியைச்சாடுவர்; எனும் புத்தியுடையோர் சாமியைத்தேடி கோயிற்புகுந்து மாவிளக்கிட்டு தூபதீபம் காட்டி என் கோத்திரமும் என் தேகமும் அழியாதிருக்கவேணும், அயலான் குடியும் தேகமும் அடியோடு அழியவேணும் என்று சங்கற்பம் செய்விக்கின்றனர். ஒரு வேளைமறந்து இவர்கள் வைக்கும் பண்டங்களில் (9) "கோயிற்சாமியுட் கொண்டாலொரு பிடி, கோயிற் புகுதல் கொலைவருமென்பர். (10) தின்னுக்கற்குத் தினம் படைத்துண்பர். தின்னுமறிஞருக் கன்னம் படைத்திலர். (11) பலனைவிரும்பி பக்தியேற்றுழல்வார். பலனை விரும்பா பக்தியேற்றுழலார். இவ்விதபுத்தியுள்ள உலகர் தன்வீட்டுக்குப் பசியோடுவரும் அதிதிகளுக்கும் விருந்தினர் பந்துக்களுக்கும் தாங்கள் "துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் துணை" எனும் வேதவாக்கியம் மறந்து (12) பசி

யோடு வந்தீர் பாழ் நாள் கெட்டது, பசிக்குப் பொசிப்பிடல் பாதகமென்பர். வந்த விருந்தினர் இவன் யோக்கியதையை அறிய விரும்பி கிஞ்சித்து பொருள் தந்தால் கடையில் அரிசி வாங்கி சமைத்துத் தின்று பசியாற்றிக் கொள்வேனென்றால் (13) "செவ்வாய் வெள்ளி சிறந்த ஞாயிறு, ஒவ்வா பொருடர் வுணருமினென்பர். ஹே! அன்பர்களே தகாத நாள் பொசிப்பிட்டாலும் பொருள் கொடுத்தாலும உமக்கும் நமக்கும் விரோதம் வரும் நல்ல நாள் பார்த்து வந்தால் உண்டியளிப்பதாய் உபசாரஞ் சொல்லி தெருக்கடக்க வழிவிடுவார். இப்படி "வாய் வாழைப்பழமும் கை கருணைக்கிழங்குமாகிய தன்மையுடையவர். பிறரிடம் பொருள் பெறவேண்டுமானால் நயமான வார்த்தையாடி "(14) தங்கட் காரியஞ்சாய விருப்பினல், பங்கமிலென்பர் படுதினமாயினும். எனும் வாக்கியத்தைப் படித்துக் காட்டி எப்படியாவது பொருள் கைக்கொள்ளும் புத்தியுள்ள உலகினர்.

வரும். P. J. (ஆத்மநேசன்.)

ஓரற்புத சரித்திரம்.

சகலஅண்டசராசரங்களி னுள்ளும்புறம்புமொன்றாகி, திரியுலகங்களினுமவஸ்த்தையற்றதாய்விளங்கும் காரணப்பொருளேதோ; அதனடியைச்சதா வந்தித்து தங்களின் வேண்டுகோளின்படி; கிரேதாயுகத்திற்குமுன் யுகமாகிய பூரணயுகத்திலுமாருங் கேட்டிராத ஒரு அற்புத சரித்திரத்தையுணரத்தக்க கதையாக சொல்லுகிறேன்கேள். இப்பரத கண்டத்தில் காவேரியாற்றங்கரையி லானந்தப் புரியில் அந்தணர்க்குலத்திலொரு புதல்வன் பிறந்தான். அவன் பெயர் கபடரஞ்சிதன். இவன் எட்டு வயதுவரை பெற்றோரிடமிருந்து, பின் நீலகண்டாபுரம் சேர்ந்து, அங்கு தானே ரூபனென எல்லோருங் கொண்டாடும் படியாக விருந்த ஓர் சிற்ப சாஸ்த்திரியின் மனையில் சேர்ந்து, தன் குச்சியை வளர்த்துக் கொண்டிருந்தான். இவ்வண்ணம் சிலகாலம் நடந்தேறி வருகையில், சாஸ்திரியி னில்லாள் பெற்றோர் மனைக்கேகினாள். அச்சமயத்தில் கபடரஞ்சிதன், இரதிதேவியை இகழும் படியான ரூபத்தை கடவுளா லமைக்கப்பெற்ற ஓர் - நளி - நாச்சியைப் பக்குவமாய்க் கூட்டிக் கொண்டு வந்து சாஸ்திரிக்குக் காண்பித்தான். அப்பெண் ரூபத்தைக் சாஸ்திரியார் கண்டதட்சணமே, அது மெள்ள சாஸ்த்திரியின் முடிக்குத் தாவி கண்ணை மூடி விட்டது. அதினலவர் சாவுக்குச் சமமாக மூர்ச்சையடைந்தார். உடனே கபடரஞ்சிதன் அவருடைய களையையாற்றி மூர்ச்சை நீங்கும்படி செய்தான். சாஸ்திரி களை நீங்கின உடனே ஜாதி குலம் இவைகளையொன்றுங் கவனியாமல் கபடரஞ்சிதனைப்பார்த்து, நீ இப்பாவையரை யென்னுடனிணங்கும் படியாய்ச் செய்தால்; இன்று முதலென் மனையில் நடக்கும் சகல காரியா காரியங்களுக்கும் உன்னை யஜமானனாக நேமிப்பேனென்றார்.

இம்மொழி கபடரஞ்சிதன்செவியில் நுழைந்தவுடன் சம்மதித்தவனாய், அப்பெண்ணை முன்னமே யேற்பாடு செய்திருந்தமையால் சாஸ்திரியுடன் கூடிக்குலாவும்படியாய்ச் செய்தான். அந்நங்கையரால் கபடரஞ்சிதனுக்கு, சாஸ்த்திரி மனையில் யஜமான் பட்டங் கிடைத்தது. அது யெவ்வாறிருந்ததெனில், நரிக்கதிகாரங் கொடுத்தால் கிடைக் கொரு ஆடுகேட்டவாறு கபடரஞ்சிதன் அம்மனையிலுள்ள சகலரையும் கடிந்துப்பேசி, எஜமானுக்கு எல்லா

வழியிலும் உபாயத்தைக் காண்பித்து, வீட்டில்பிறந்த பிள்ளைகளுக்கெல்லாம் மேன்மையாக பல்லோராலுங் கொண்டாடும்படியாக நற்பெயரெடுத்து சாஸ்த்திரிக்கு மேல் சாஸ்த்திரியாக அந்நகரில் விளங்கினான்.

இது இங்ஙனம் நிற்க; வைகுண்டாபுரத்தில் ஜகஜாலன் வீட்டிலொரு பெண்ணு மிரண்டாண் குழந்தைகளும் பிறந்து நாளொருமேனியாய் வளர்க்க அவர்களும் வளர்ந்து வாலிபதசை யடைந்தனர். ஜகஜாலன் தன் புத்திரியை பார்த்து, தம்மகளாகிய, கமலரஞ்சனைக்கு விவாகஞ் செய்யவேண்டுமென தன் பந்துவர்க்கங்களுடன் சொன்னான். அவர்கள் கைலாச புரத்தில் சுந்திர சாஸ்ந்திரி குமாரன் குலசேகரசாஸ்த்திரிக்கு கொடுத்தால தம்பதிகள் சுகஜீவியாய் வாழ்வார்களென்று நன்கு மதித்து, சுந்திர சாஸ்திரியைக் கண்டு தங்களுடைய கருத்தைவெளியிட அவரும் சம்மதித்து பல்லோரறிய குலசேகரசாஸ்திரிக்கும் கமலரஞ்சனைக்கும் விவாகம் நடந்தேறியது. தம்பதிகள் சிலகாலம் கைலாசபுரத்தில் மனுநீதி வழுவாமல் எல்லாம் நடத்திக்கொண்டு வந்தார்கள். அகஸ்மாத்தாய் கமலரஞ்சனையின் பிதா ஜகஜாலன் வைகுண்டா புரத்தைவிட்டு வைகுண்டம் சேர்ந்ததாய் கேள்வியுற்றுடனே அவ்விடம் போனார்கள்.

குலசேகர சாஸ்திரியும் கமலரஞ்சனையும் வைகுண்டாபுரம் சேர்ந்தபின் மாமனாருக்குச் செய்யவேண்டிய சகல கர்மங்களையுமான்றோருரைப்படி செய்து முடித்து சிலநாளங்கிருந்துதன் குடும்பத்தாரின் துயரங்களை மாற்றி உலகவாழ்க்கையைப் பிடித்து நடக்கும்படியாய்ச் செய்து, மாமியாரை நோக்கி ஓ. அத்தையம்மா! நானுமுன் குமாரத்தியும், கைலாசபுரம் விட்டுவந்து நெடுநாளானதால், பிதாசுந்தரசாஸ்திரியாரென்னமாயிருக்கிறாரோ யாதொன்றும் தெரியாததினால் நாங்கள் போயவரைப்பார்த்தங்கு சிலநாளிருந்து குடும்ப க்ஷேமங்களைக் கவனித்து மீள இங்கு வருகிறோமிதனிடையிலுனக்கு ஏதேனும் நேருமாகில், வைகுண்டா புரத்திற்கும் கைலாச புரத்திற்கும் நூறு இருநூறு அல்லது ஆயிரமயிலல்ல, மச்சினன் சோளமுத்தை யனுப்பி வையுங்கள் கோழிகூவு முன்னங்கு சேர்வான். நான் கதிரோன் மறையுமுன்னிங்கு வரமாட்டேனோ? ஆனதால் நீ மனதின்கண் ணெவ்வித வியாகூலமும் கொள்ளாமல் விடைதரவேண்டுமென, மாமியார் பாதங்களின் மீது விழுந்து தெண்டம் சமர்ப்பித்தெழுந்து கைகட்டி வாய்பொத்தி வெகு பயபக்திவினையத்துடன் எதிர் நின்றான். இவ்வாறு நிற்கும் மருமகப் பிள்ளையை கண்குளிரப் பார்த்து, அகத்தின் கண்ணடங்கா மகிழ்ச்சிக்கொண்டு, அப்பா! இன்றிருந்து, நாளை போகக்கூடாதோ வென்றாள். அம்மொழியை முடியெனசிரமேற் புனைந்து சம்மதித்தவன் போல் அபிநயங்காட்டி யவ்விடம் விட்டகன்றான். உடனே தாயார் ஜயநாங்கி மகள் கமலரஞ்சனையைக் கூப்பிட்டு என்னடியம்மா' உன் கொழுநன், தன்னாட்டிற்குப்போக உத்திரவு கேட்டார்.

நாளை போகலாமென்று சொன்னேன் உன்னபிப்ராயமென்னென்றாள். இவ்வாறு தாயார் சொன்னச்சொல் கமலரஞ்சனையின் செவியில் நுழைந்தவுடனே பொத்தென்று பூமியின் மீது விழுந்து மரணத்திற்கு சமமாக மூர்ச்சையடைந்தாள். ஜயநாங்கி, ஏதோ மோசம் வந்து விட்டதென்றுணர்ந்து யாதொன்றையும் செய்ய கை காலிடம் தராத தால் "அக்கத்து வீட்டாரே! அண்டை வீட்டாரே, பக்கத்துவீட்டாரே, சந்துவீட்டாரே, பொந்து வீட்

டாரே' வாருங்களடியம்மா,' அக்கா! தங்காய்! ஐயோ! அண்ணா! தம்பி! என்று வாயில் வாயிலடித்துக்கொண்டு மண்ணின் மீது விழுந்துப் புரண்டு ஓ வென்று ஓலமிடவே, ஊரிலுள்ளோரெல்லாம் சந்தைக் கூட்டம் போல் ஜயநாங்கி வீட்டில் வந்து சேர்ந்து, கமலாஞ்சனையின் சோபம் தீரும்படியாகச்செய்து, ஜயநாங்கியின் மனதை நிலை நிறுத்தியவரவரிருப்பிடப்போய்ச் சேர்ந்தார்கள். ஜயநாங்கி, அடியம்மாவுனக்கு இந்த மூர்ச்சை வரவேண்டிய காரணம் யாது, நீ பெண்ணாய்ப்பிறந்து 16-வருஷம் இரவும்பகலு மென்னை இடை விடாதிருந்த காலத்திலில்லையே, புருஷன் மனைக்குப் போய் இரண்டு வருஷகாலமில்லையே அங்குனக்கு எப்போதாவது வந்ததுண்டோசொல்லென்றாள் கமலாஞ்சனை என்னை யருமையாய் பெற்று வளர்த்த தாயே' நீ சொன்னபடியெனக்கிதற்குமு னிப்பேர்பட்ட மூர்ச்சைவந்ததில்லை. ஆனால், நீ, என்னைக் கொண்டவனுடன் கூட்டி அவருடைய மனைக்கனுப்ப சற்று மாலோசியாமல் நினைத்தாயே அந்த எண்ணமே இந்த மூர்ச்சைக்கு முக்கியமான பீடமாயிருந்ததென்றாள். இன்னும் வரும். V. C. M.

கமலாவதி.

(67-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவ்வாறாகச் சம்பந்தப்பட்டு கருக் கொண்டு பிறக்கும்பிள்ளைகள் பயங்கரமுள்ளதும், வீரியமில்லாததும், மந்தமும் புல்லறிவுடையதுமன்றி அங்கஹீனமுடையதும் "கண்பார்க்கக் கையா லெழுதானைப்—பெண்பாவி—பெற்றாளேபெற்றாள் பிறர் நகைக்கப்பெற்றாளே!—" என்பதற் கொப்பப்பிறக்கிறதென்பதற்கு ஆக்ஷேபமென்ன? சம்போகக் காலத்தை அவசரமின்றியும், சாந்தம்! நற்சிந்தனையோடுங்கழிக்கவேண்டியது. இதைநோக்கியன்றோ பெரியோரும்! "நேசனைக்காணாவிடத்து நெஞ்சார வேதுதித்த, லாசானை யெவ்விடத்து மப்படியே—வாச-மனையாளைப் பஞ்சணையில்—"என்றுதனதுநாயகியைப்பஞ்சணையில் மாத்திரம் சந்தோஷமாயாசரிக்க வேண்டியதாகக் கூறியுள்ளார்.

இப்படிப்பிறக்கும் பிள்ளைகள்தான் சாதுரியமும் விவேகமு முள்ளபிள்ளைகளாகின்றார்கள்"—ஞானமுந்தயையுங்கொடையும்பிறவிக்குணம்." என்ப இவையெல்லாம் கருவமையுங்காலத்தில் உள்ளகுணத்தைக் காட்டுகின்றனவென்பது தெள்ளிதில் விளக்குகிறது. மயிலினது முட்டையை கோழியண்டை வைத்து குஞ்சு பொரிக்கச்செய்தால் கோழிக் குஞ்சாகுமா? அம்மயிலினது ரூபங்களும் குணங்களும் அம்முட்டைக்குள் ளடங்கினதாகி, குஞ்சுகள்முட்டையினின்று வெளிப்படுங்காலத்துமயிற்குஞ்சுதானே வெளிப்படும். ஒவ்வோர் பிராணிகட்கும் இயற்கையாயுள்ள குணங்கள் அவ்வதனிளங்கைகளிடத்திலமைந்திருக்கும். "சாதித்தொழிற் றனக்குத்தானே வருமொருவர், போதிக்கவேண்டுமோ பொற்கொடியே" என்பதாக ஒருபூனைக் குட்டியை அது மிகச்சிறியதா யிருக்கும்போதே தன் தாயிடமிருந்து எடுத்துக் கொண்டுபோய் தனியாகவைத்து வளர்த்து பெரிதான பின்னர் எதிரில் எலியைக் காண்பிக்க சும்மாவிடுமா? அதோடு பண்டையகுணங்களும் அதைவிட்டொழியுமா? இப்படியே ஒவ்வொன்றினுக்குமுண்டு. இதுநோக்கியே "நூலைப் போலுஞ்சேலை தாயைப் போலும் பிள்ளை" என்றுகூறுவர்.

இதினும் குடியருடைய சம்போகத்தை யென்னென்று சொல்வது; இவர்கள் குடித்திருக்கும் போது ஒவ்வொரு றுப்புகளும் தத்தம் நிலைதவறியிருப்பது யாவருமறிந்ததே, அதையவர்களும் அறிவர். எங்ஙனமெனில்? ஒருவன் மது வுண்டிருப்பானேயானால் தனதுயஜமானனண்டைக் கூசாமல் போகவும் பேசவும் அச்சப்படுகின்றான். யாதேனும் விவகாரங்களில் அடுத்திருப்பவர்களை நோக்கி; அப்பா நான்தான குடித்து விட்டிருக்கிறேன் இந்தகாரியத்தைநீயே அவர்களுக்கு விவரித்துச்சொல்லு என்கிறான். இதல்லாமல் இன்னுமநந்தம் அத்தாட்சிகளுண்டு. இவனிப்படி யிருக்குங்காலத்தில் கருவூறும் பிள்ளை மந்தபுத்தியும், முன்கோபியும், குரங்கைப்போலச் சேஷ்டையுடையவனுமாயிருப்பா னென்பதற்கு ஆக்ஷேபமென்ன? சிலதேசங்களில் புருஷரும் ஸ்திரீகளுமாகிய இருபாலரும் குடியரா யிருக்கிறதாகக் கேள்விப்படுகிறோம்; இவர்கள்நிலைமை ஐயோ! பரிதாபம்; பரிதாபத்தினும் பரிதாபமே.

கருக்கூடுதற்காக சம்போகத்துக்குப் பின்னர்பதினைந்து நிமிஷநேரம் அம்மனையாளை அசையாமற்படுத்திருக்கச் செய்யல் நலம்.

இதோடுபலவித நன்மைகளை நோக்கியேசம்போகக்காலத்தை ஆடவரும் மாதரும் நல்லகுணத்தோடும் நல்லசெய்கையுடனும் ஆசிரிக்கவேண்டியதெனப் பெரியோர் கூறியிருக்கின்றனர்.

இவ்விதம் இருக்கும் ஆடவர்களும், மாதரும் மாதவிடாயான நான்கு நாட்களும்கட்டாயம்நீக்கப்படவேண்டியது. என்னன்றால்சாதாரணமாகவாயிலிருந்து கழியும் (உமிழ்நீர்) எச்சியானது ஒருவர் மேற்படுமாயின் அவ்விடத்தில் எச்சிற்றேமலுண்டாவது அனைவருமறிந்த காரியமன்றோ? இதுவே இவ்வளவு கெட்டதாயிருக்க மாதவிடாயில் கழியுந்நீர்எவ்வளவு கெட்டதென்றுசொல்லாமலே விளங்கும். அவ்வுதிரத்தையோர்செடியின்மேலூற்றினால் அச்செடிபட்டுப்போகு மென்பதற்கு ஆக்ஷேபமில்லையாகையால் அந்நான்கு நாட்களையும் நீக்கிஸ்திரீயும் ஸ்நாநவதியாகப் பின்னராகிய; ஐந்து, ஏழு, ஒன்பது ஆகிய ஒற்றைப்படை நாட்களிற் புணர்ந்தால் பெண்பிள்ளையும்; ஆறு, எட்டு, பத்து, ஆகிய இரட்டைப்படை நாட்களிற்புணர்ந்தால் ஆண்பிள்ளையும் பெறுவார்கள். என்றினும் ஆடவருக்கு வெளியாகும் நீர் (சுக்கிலம்) அதிகமானால் ஆண்பிள்ளையும், மாதருக்குவெளியாகும் நீர் (சுரோணிதம்) அதிகமானால் பெண்பிள்ளையும், இருவருக்கும் ஒரேஅளவாயின் பேடியாகவும் பிறக்கும் இருவருக்கும் ஷை நீர் இல்லாமலும் அல்லது சொற்பமாயிருந்தாலும் கருப்பமில்லை, இதன்றியும் வேறு சில ஏதுக்களுமுண்டு. மாதர்கட்கு சுரோணித நீர்கழிந்த பின்னர் ஆடவருக்கு வெளியாகுமாயின் அக்காலத்திற்றரிக்கும் பிள்ளைநல்லரூபமும் பாக்கிய முடையதுமாம் அப்படியில்லை யாயின் பலனன்று.

இருபாலருள் யாருக்கேனுந் திரேகா சௌக்கியம் நேரிட்டால் புணர்ப்பை நீக்கவேண்டியது. இதுசகலகாரணங்கட்குந் துன்பத்தைத்தரும்; கருப்பற்றினும் அந்நோய் அதிலேதங்கும்.

சம்போகத்தின் பின்னர் சிற்றுண்டியுண்ணுதல் அவசியமானகாரியம். ஆனால் பழுக்காதகாய்களையும், எண்ணெயிற்செய்த பல காரங்களையும் உண்ணப்படாது. நெருக்கபோகத்தாரது ஸ்கலிதம்பலனற்றிருப்பதால் அவர்

சுட்டுப் பிறக்கும் பிள்ளைக்கள் அற்ப ஆயுளுடையதாகிறது. அடிக்கடிவியாதிக்குட்படவுமேதுவாகும். ஸ்திரீகள்மாதவிடாயானபத்து நாட்கள்மாத்திரந்தான் கருப்பைதிறக்கப் பட்டிருக்கும். அதற்குமேல் மூடிக்கொள்ளும். இப்பத்துநாட்களுக்குள்தான் கருத்தங்குவது. இவ்வண்ணந் தங்குவதானது மாதராடவராகிய இருபாலாரது இந்திரியங்களுமொன்றுசேர்ந்து பின்னரவையிலிருந்து ஓர்சிறு துளி தான அக்கருத்தலத்துக்குச் செல்லும்.

“ பனியிலோர்பாதி சிறு துளிமாது
பண்டியில்வந்து புகுந்து திரண்டு ” என்பதால் விளங்கும்; இப்படிச்செல்வது தான்

“ தினையளவு போதாச்சிறுபுன்னீர்நீண்ட
பனையளவுகாட்டும் படித்தான்—” அதாவது தினையளவினுஞ் சிறிதாகப் புல்லினது நுனியில் நிற்கும் பனித்துளியானது ஒரு பெரியபனை மரத்தினது நிழலையுந்தன் னுள்ளடக்கிக் காட்டும் என்பதுபோல அவ்விந்திரியத்துளியானது தன்னுள்ளடக்கிய வுருவைத்திரட்டித்தானே யுருவாகிச்சில ஆதாரங்களால் வெளிவருவதுயாவருங் கண்டதே. மாதர்கள் பிள்ளைபெற்ற பின்னர் தங்களது சுகக்ஷேமம் பெறுமளவும் ஆடவரோடு நித்திரிக்கப்படாது, ஆடவருமிதை கவனிக்கவேண்டியது. (*Photograph*)புகைப்பட வுருகூடுதற்கு (*Dark-room*) இருட்டறை எவ்வளவு அத்யாவசியமோ அவ்வளவும் பிள்ளைகளுருபெறுதற்கு தேவையாகையால் புகற்சய்போகஞ் செய்யப்படாதெனநீக்கப் பட்டுள்ளது. ஸ்திரீகட்கு முதுமையிலும் மாதவிடாய் எவ்வளவு நாட்கள் உள்ளனவோ அவ்வளநாட்கள்வரை கருநிற்கஏது வுண்டு. ஆடவருக்கு இந்திரியநிலையுள்ள வரையுண்டு. ஸ்திரீகட்கு கருப்பந்தாங்கில் அவளது கடைசிமாதவிடாயின் மாதமும் தேதியும் கொண்டு பின்னுக்கே மூன்று மாதத்தை எண்ணி அந்ததேதியோடு எட்டுநாட்கள் சேர்த்துக் கொண்ட தினம் அவளது பிரசவதினமாகும், திரேகக்கூறுபாட்டினால் இரண்டொரு நாள் முந்துவதும், அல்லது பிந்துவதும் உண்டு எனச்சொல்லிவந்த அவ்வரசியை யணைத்துக்கன்னத்தோடு முத்தமிட்டு நாயகீ! உனது கூர்மையும் சாதுரியமுமுள்ள புத்திக்கு வெகுவாக வுன்னைமதித்துக் கொண்டேன்.

“ வாச—மனையாளைப்பஞ்சணையில்—” என்னும்பாடலும், “நலமொன்றுமறியாத நாரியரைக் கூடி” என்னும் பாடலும் வெட்கித்தலைநாணவோ நீயுதித்தனை? நீயல்லோ பெண்களிற்றேர்ந்தெடுத்த நாயகம்! நீசொல்லியதால் என்னிடத்திருந்த சில அவசரக்குணங்களும் தலை காட்டாமல் பின்வாங்கிப் போயின; நம்நாடு நீதிநெறியுள்ள மாதர்களால் நிறைக்கப்பட்டிருப்பது “அரசனெவ்வழி குடிகளுமவ்வழி’ என்ப நின்னைத் தொடர்ந்தல்லோ விருக்கின்றது என்பதையின் றறிந்தேன்.

“ கோடிகொடுப்பினுங் குடிபிறந்தார் தம்மொடு
கூடுதற்கோடிபெறும்—” என்பதின்னோடு சேர்ந்துவாழ்தலே வாழ்வாகும், எனப்பலவாறுகப் புகழ்ந்துகொண்டிருக்க சூரியனும் மேற்குத்திசையை நோக்கிச்சென்று மலைக்கப்புறம் மறைந்து கொண்டான். அவ்விராப்பொழுதையும் சுபவேளையாகக் கழித்தனர். (தொடரும்.)

பா. முனிஸ்வாமி பிள்ளை,

தெய்வாலயம்.

கோளிற் பொறியிற் குணமிலவே யென்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

சீர்வாய்ந்த தண்கடலாற் சூழப்பட்டிராநின்ற விவ்வகிலத்தையும், அதன்கண்ணடங்கி யிராநின்ற சர்வஜீவ கோடிகளையும், தாவர வர்க்கமுதலானவைகளையும் படைத்துக் காத்தாளுஞ் சர்வவியாபக பரஞ்சோதி யொருவருளாரென்பது ஏற்கனவே யாவருமறிந்த சத்தியமென்பதற்குக் கிஞ்சித்துமையமின்று. அப்பரம நாதனருளால் யாமடைந்தனுபவிக்கும் பாக்கியம், சிலாக்கியம், யோக்கியம், வாக்கியம் முதலானவைகட் கெண்ணில்லை.

இவ்வளவு வரைகடந்த கருணை வாரிதியாகிய கர்த்தனையாம் எக்கணமும் மறவாமலும், வேறுகவலைகளை மனதில் வைக்காமலும், வணங்கி நன்றியறிந்த நமஸ்காரம் சமர்ப்பிக்க வேண்டிய தத்யாவசியமென நன்னூல்களாகிய பன்னூல்கள் முறையிடுகின்றன வல்லவா? ஆனமையால் நம்மாற்கூடியமட்டும் ஈஸ்வர தியானத்துட னிருத்தல் வேண்டும். அஷ்டகுணபிரானை விஷ்டமுடன் நிஷ்டைக்கொண்டு அனுஷ்டிக்கவேண்டிய முறைமையுடன் பஜித்தல், நம்மின் வாசஸ்தானங்களில் கூடாதகாரியமென்பது வெளிச்சமே. இதனை யோர்ந்தன்றோ "கோயிலில்லாவூரிற் குடியிருக்கவேண்டா" மென்று ஒளவை முறையிடுகின்றனள். அதாவது யாம் கோயிலென்னு மொருபொது இடத்துச்சென்று ஒருமனதுடன் யாவரு மேகோபித்து செபித்தல் முறைமையெனக் கரதலா மலகம்போற் றோன்றுகிறதன்றோ?

கோயிலுக்குச் சென்றுதானா பஜித்தல் வேண்டும். "எவ்வுயிரும் பராபரன்சந் நிதியதாகும் இலங்குமுயி ருடலனைத்து மீசன் கோயில்" என்றபடி யப்பரமநாதனை நம்மனதின் கண்ணிறுத்தி பூசித்தற்கூடாதா? வெனத் தங்களினறியாமையினாலும், சந்தேகத்தினாலும் சிலர் வினவ முன்வரினும் வருவர். அன்னோருக் கீண்டொருவாறு சமாதானஞ் செப்புவாம். என்னையெனின், யாமிப்பூவின்கண் கிரகஸ்தராயிருக்கு மந்தஸ்தால் நாம் ஒருவீட்டின்கண் குடியிருக்கின்றோம். அவ்வீடு என்கிற பதம் ஒன்றாயிருப்பினும் அவ்வீட்டினுட் பல அறைகளேற்படுத்தப்பட்டு ஒவ்வொரு அறையும் வெவ்வேறு விடயங்கட்காக உபயோகப்பட்டு வருகின்றது. அவையாவன:—சமயல் அறையென்றும், படுக்கை யறையென்றும், பலசரக்கு அறையென்றும், நேசர்கட்குரிய அறையென்றும், சிறுவர்கட்குரிய அறையென்றும், பெரியவர்க்குரிய அறையென்றும் கூறப்பட்டு ஒவ்வொரு அறைகளும் தக்கபடியுபயோகிக்கப்பட்டு வருகின்றது. இன்னம் நம் நாட்டைச் சுற்றிப் பார்க்குமிடத்து ஒவ்வொரு அலுவல் நடத்துவதற்கும் வெவ்வேறு சாலைக ளேற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவையாவன:—நியாயஸ்தலம், கலாசாலை, பணிசாலை முதலியன.

இங்ஙன மொவ்வோரிடத்திற்கும் பிரத்தியேகமான சாலைகளிருக்க, தெய்வாலயமென்னு மொருசாலை யிருத்தலத்தி யாவசியமே. ஆனமையால் போலி துறவிகட்போல் முறட்டாட்டஞ் செய்யாது தெய்வாலய தரிசனஞ் செய்துய்வோமாக.

தெய்வாலய தரிசனஞ் செய்வதற்குப் பெரும்பாலும் ஒவ்வொருசமயத்தாராலும் நாளும், நேரமுங் குறிக்கப்பட்டிருப்பினும் நமக்குச் சவகாசம் கிடைத்த நேரத்தெல்லாம் ஆவயஞ்சென்று பஜிக்கலாம். அங்ஙனஞ்சென்று பஜித்து வருங்காலத்து அவன் அனுசரிக்கவேண்டிய முறைமையாதிகளைக் குறைவற முடித்தல் வேண்டும். அப்படிக்கின்றி ஆங்குவந்திருக்கும் ஆண் பெண்ணிருவர்களின் கோலத்தையும், அலங்காரத்தையும் பார்த்து மகிழ்ச்சியடைவதுடன் தீயவெண்ணங்களும் மேலிட்டுக் கொள்ளுதல் விவேகமென்று

"கையொன்றுசெய்ய விழியொன்றுநாடக் கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சகநாவொன்று பேசப்புலால்கமழு
மெய்யொன்றுசாரச் செவியொன்று கேட்க............"

என்ப, தெய்வாலயத்துக்குப் போகுங் காலங்களில் வீண் ஆடம்பரங்களுடன் போவதும், மற்றவரெவ்விதமான ஆடையாதிகளணிந்து வந்தனரென்றுஞ் சிந்தித்து தங்கட்கோலத்தையும் அன்னோர் கோலத்தையுமொத்துப் பார்த்துப் பெருமை கொள்ளுதலுஞ் சிறப்புடைத்தன்று.

பெரும்பாலும் பெண்மணிகள் தெய்வாலயங்கட்கு வரும்போது கல், கல் என்றொலிக்கும் சதங்கை முதலான காலணிகளையும், கல, கல வென்று சப்திக்கும் வளையல் முதலானவைகளையு மணிந்துக்கொண்டும், சல்லாதுணியுடுத்து, சேய்மைக் கண்ணும் வீசும்படியான பரிமளவர்க்கங்களுடன் வருவதும் தூற்றற்பாலதே. என்னையெனின், அம்மாதர்கள் இவ்விதமான அரவத்துடனும், ஆடம்பரத்துடனும், ஆலயத்துள் நுழையுங்காலத்து அவணிருக்கும் சங்கத்தினரின் தியானத்துக்குப் பங்கம் நேரிடுவதுடன் வந்தவர்களைக் குறிப்பிட்டுப் பார்க்கவும் நேரிடுகின்றது. அதனால் ஆடவர்கட்கும்; மங்கையர்கட்கும் மனமாறுதலு முண்டாகின்றது! நம்மின் சுகபோகங்களைக் காட்டுவதற்குத் தெய்வாலயந்தானா இடம்? மீண்டுந் தெய்வாலயத்துக்குள் வர்து அவன் அனுசரிக்கவேண்டிய முக்கிய கருமங்களை முற்றும் மறந்து, வந்திருக்கும் மற்ற மாதர்களின் உடை, மணிமுதலானவைகளைப்பார்த்து அருகிலிருப்பவருடன் மதிப்புக்கூறுவதும், அதற்குமேல் தங்கள் அருகிலிருப்பவருடன் மதிப்புக்கூறுவதும், அதற்குமேல் தங்கள் அபிப்பிராயங்களைச் செப்புவதுமாயிருந்து, அசைப்போடும் ஆடுமாடுகளைப்போல் வெற்றிலைப்பாக்கு மென்றுகொண்டு காலம் போக்குவதுமா யிருக்கின்றனர். இன்னோர் உருத்திராக்ஷப் பூனைகட்போல் பெரிய செபபுத்தகமும், நீண்ட செபமணிமாலையும் கையில்கொண்டு வரும்போது பகாதப சிரேட்ட மணிகட்போற் காணப்படுகின்றனர். ஆனாலின்னோர் தம் நடத்தை யவ்வளவுக்கும் மாறுபாடா யிருப்பது விவேகமற்றதன்றோ?

பெண்மணிகளின் நடத்தைதானிவ்வளவென்றாலோ ஆண்பிள்ளைகளின் செயலைச் சற்றாராய்ந்து பார்ப்போமாக:—

இவர்களிற் பெரும்பான்மையோர் தங்கள் வேடங்களைக் காண்பிப்பான் வேண்டியே கோவிலுக்கு வருகின்றனரன்றி யுண்மையில் பக்தியின் குறிப் பின்னோரிடத்துக் கிஞ்சித்துமில்லை யென்பது இனிஸ்பஷ்டமாய்த் தெரியவரும். இவர்கள் கோயிலுக்குப் போவோமென்று வீட்டைவிட்டுப் புறப்ப

டும்போது தங்கட் சிந்தனையாதெனில், இன்றையதினம் இன்னார், இன்னார் வந்திருக்கக்கண்டு ஆநந்திப்போமா? நாமணிந்திருக்கும் நவீன உடைகளையெல்லோரும் பார்க்கட்டும், சென்றவாரம் அவன் அணிந்து வந்ததற்கு மேலாக நானிந்தவார மணிந்திருக்கின்றேன் என்று வீண்பெருமையுடன் வருகின்றனர். இதுபட்டுந் தங்கள் அறிவின்மையை நிறுத்திவிடாது கோயிலுக்கு வந்தகாலத்தும் அவன் அடக்கமென்பது சிறிதுமில்லாமல்,

"காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூ உங்கில்லை யுயிர்க்கு."

என்பதை உணராது மகா பிரபுவைப்போல் மீசையின்மேல் ஒருகையும், இடுப்பின்மேல் மற்றொருகையும் வைத்திருப்பதுடன் ஆங்கு அனுட்டிக்க வேண்டியவைகளை யசட்டைச்செய்து இருகால் விலங்கைப்போலு மிருக்கின்றனர். தெய்வாலயங்களில் நடக்கும் விடயங்கள் இவ்வளவுதானா? இல்லை. விசேடமான வுற்சவகாலங்களில் நடக்கும் ஒழுங்கீனங்களுக்கும் எண்ணில்லை. அவற்றுள் ஈண்டு சிலதெடுத்துரைப்பாம்.

ஆடவர்களும் மங்கையர்களும் அலங்கார துணிமணிக ளணிந்து பரிமளாதியுடன் வருவது இயல்பே. ஆனாலன்னோர் அவ்வாறு வருவதைப் பார்க்கிலுந் தங்களிருதயமாகிய மலருக்கு வேண்டிய அலங்காரங்களையும், பரிமளங்களையும் பூர்த்திசெய்து கொண்டுவரின் புகழற்பாலதே. (இருதயமலருக்கு வேண்டிய அலங்காரம் யாதென வறிந்துக்கொள்ள சிலர் விரும்புவர் போலும். அதாவது பொறாமை, காமம்; பொய், வஞ்சனை, சினம் என்னும் அசுத்தங்களைச் சீலம் என்னும் நீரினாற்போக்கி, சான்றாண்மை, தன்னைப்போ லனைவரையும் நேசித்தல், விவேகம் என்னுமிவைகளால் அலங்கரித்துக் கொள்ளுதலே.) இப்படிக்கின்றி உற்சவகாலத்தில் துற்சவகாசம் மேற்கொண்டு இரதம் வலம் வரும்போது அவ்விரதத்தின்கண் வீற்றிருக்கும் பரஞ்சோதியைக்கண்டு வந்திக்காதவராயும், தங்கட் கண்ணையுங், கருத்தையும் ஞானவிடயங்கட்குச் செல்லவொட்டாமலும் நாற்புறமுஞ் சுற்றி நோக்கிக்கொண்டு ஈனநடத்தைகட் குள்ளாகின்றனர். அந்தோ! தெய்வாலய தரிசனமென்பதும், உற்சவகாலத்து அநுட்டானங்க ளென்பது மிவைதானா?

அருகிலிருக்குந் தெய்வாலயங்களின் உற்சவ வைபவ காலங்களின் நடத்தைகள் தானிவ்வளவென்றாலோ, தூரதேயங்களில் நடக்கும் உற்சவகாலங்களில் நம்மனோர் செய்யுந் துர்நடத்தை கட்களவு முண்டோ? இவர்கள் மகா தபசிகட்போலும், சன்மார்க்கர்போலும், பக்திமான்கட்போலும் தங்களைத் தாங்களே மதித்துக்கொண்டு, கையில் பணமில்லாத காலத்தும், மகா துணிவுடன்—கடன்வாங்கிக்கொண்டு, புத்திர பௌத்திர, களத்திராதிகளுடன் மகா ஆடம்பரமாய் புறப்பட்டு செல்கின்றனர். ஐயோ! இன்னோர் இவ்வளவு பிரயாசையுடன் தூரதேய உற்சவங் காணப்போயும் தங்கள் மதிக்குறை சற்றேனுங் குறையாமல், வந்தவிஷயத்தை மறந்தாற்போல் தங்கள் சொந்த விஷயத்தையே கருதியாநந்த சல்லாபத்துடன் உண்பதுங் குடிப்ப[illegible] நா[illegible] செலவிடுகின்றனர். இவர்கள் முக்கியமாய் தெய்வாலயத்தை [illegible] றவரல்லர்போலும். ஆனால் பதார்த்த வகைகளையும், தீர்த்தப் பிரசாதங்க[illegible]யும் (மதுபானம்) சங்கீத கூட்டங்களையும், நேயர்களின் ஆட்டங்களையும்,

வயல்களின் வேட்டைகளையும் மனதில் நாடி போகிறவர்களெனச் சொல்லத் தடையுமுண்டோ? ஆ! ஆ!! போலிபக்திமான்களே நம்மின் விவேகத்தை யிவண் தூக்கிப்பாரும். "குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக் கொள்வதைப் போல்' நம்மின் பாவ விமோசனத்தைக்கருதி சென்ற விடத்து, மீண்டும் பாவத்தைச் சேர்த்துக்கொள்வது தூற்றற்பாலதே.

"மலர்மிசை யேகினான் மாணடிச் சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்."

என்னுந் திருவாக்கை மனதிறுத்தி, அன்பர் தம் இருதய கமலமாகிய மலரின்கண் வீற்றிருக்கும் நித்யாநந்த வருட்பெருஞ் சோதியாகிய நம் அத்தனின் திருமலர் சரண்டு வியைக்கணமும் மறவாது தக்கவிதமாய் வந்தித்து வருவோமாகில், நாமடையும் பாக்கியத்திற்கும், யோக்கியுத்திற்கும், சிலாக்கியத்திற்கு மளவுமுண்டோ? இல்லை! இல்லை!! குணமது கைவிடே லென்பதைப்போல் பக்தியென்னும் நற்குணத்தால் விளையும் பலனைக்கருதி யதன் வழி நாடி யுய்வோமாக. சுபம்! சுபம்!! சுபம்!!! த. தாமஸ்.

உலகம் சத்தா? அசத்தா?

(94-ம் பக்கத்தொடர்ச்சி.)

காரியத்திற்குப் பேதகாரணமிரண்டும் அபேதகாரணமொன்று முண்டு எனத்துணியப்படும். கடமாகிய காரியத்திற்குத் தண்டு சக்கரந் துணைக் காரணமுங் குலாலனிமித்த காரணமுமாகிப்பேதமும், மண்முதற்காரணமுமாகி அபேதமு மாகின்றன.

காரியம் வனைவதற்கு முன்னும் அழிவு பாட்டிற்குப் பின்னு மின்றென்பது துணிவேனும், வனையப்பட்டபின்னும் அழிவு பாட்டிற்கு முன்னு முளதாதலா லதனிடைநின்ற காலத்தே காரியமான கடஞ்சத்தாமெனின் யாது சத்தோ வஃது முன்னும் பின்னு நிகழ்வுமென்னு முக்காலத்து நிகழவேண்டும்; முன்னும் பின்னுமில்லாதது. "இல்லது வாராது உள்ளது போகாது," என்னு நியாயத்தா னிடை நின்ற காலத்து யாங்ஙன நிகழும்.? இடைநின்ற காலத்து உளதேன் மண்ணாய் நிகழுங்கால் கடமின்று; மண்ணின் கண் வளைவு முதலாய குணங்க ளெய்தியவழிக் கடமென்னும் பெயரெய்தும். வளைவு குவிவு முதலியன குணங்களேயன்றிக் குணியன்றாய், அக்குணங்களும் குணியான மண்ணின் கட்டோன்றி யதன்கண்ணே நிகழும்.

குணி யெஞ்ஞான்றுளதோ வஞ்ஞான்றே அதற்குக் குணமு முண்டென்ப தன்றே, வளைவு குவிவு முதலாய குணங்கணிகழ்வதற்கு முன்னரு—முருட்சி யல்லது வேறுகுண நிகழ்ந்தன, மண்ணென்னுங் குணி தன் குணத்தொடுங் கூடிய வழியானே யம்மண்ணுக்குக் கடமென்னும் பொருட்பெய ரங்ஙனம் பொருந்தும் மண்ணென்னுங் குணியு மதன்க ணுளதாய வளைவுகுவிவு முதலாய குணங்களுமே யல்லது கடமென்னும் சொற்குப் பொருள்வேறின்மையான் இடைநின்ற காலத்துங் கட மின்றென்பதுவே திண்ணம், இதனானே எஞ்ஞான்றுங் கடமென்றொரு பொருளின்றென்றேபசுமரத்தாணிபோனாட்டப்பட்ட தென்க.

அற்றேல் கடமென்னுந் தோற்றமும் அபாவமாக வேண்டு மன்றே. கடத்தோற்றங் காணப்படுவதனாற் கடமின்றென்றெவ்வாறு கருதப்படுவதெனின், தோற்றம் பொருளாகுங்கால் கயிற்றினிகழு மரவு முளதாகல் வேண்டும். அரவு பொய்மையாகத் தோற்றினுங் கயிறென்றுணர்ந்த வழி யரவென்பது தோற்றக் கண்டாமில்லை; கடமங்ஙனமன்று மண்ணல்லது எஞ்ஞான்றுங் கடமின்றென்றுணர்ந்த வழியும் பெயர்த்துந் தோற்றுகின்றதென்னை யெனின், நன்றுவினாவினாய்; கூறுதும்;

தோற்றமென்பதிரு திறத்தன. அவை காரணத்தைக்கண்டவழிக்காரியந்தோன்றாதிருப்பதொன்று. அது கயிற்றரவு முதலியன வென்க. காரணத்தைக் கண்டவழிக் காரியந்தோற்றுவதொன்று - அது கானனீர் முதலியன வென்க. கடத்தோற்றங்களானினீர் முதலினபோல்வ தொன்றாகலின் காரணமான மண்ணே யாண்டு முளதெனவுங் காரியமான கடமில்ல தெனவுமாய்ந் துணரினுங் கடத்தோற்ற மிலதாகாமற் போந்திலது. அற்றாகலினன்றே இத்துணையுந் தோற்றம். பொருளன்றெனக் கூறவந்தாமன்றித் தோற்றமு மின்றெனக் கூறினா மில்லை. "இல்லது வாராது உள்ளது போகாது" என்னு நியாயத்தாற் காரியமின்றெனினுங் காரிய நிகழாக் காலில்லையே யல்லது நிகழ்ந்தா லுளதாகாதோ வெனின், செய்பவன் காரணத்தைக் குணவேற்றுமை செய்வதன்றி யிலதாய பொருளை யாக்கற்கிடனின்றென்க.

மண்ணான் வனைந்த கடம் பெயர்த்து மண்ணாயவழி "உள்ளது போகாது" என்னு நியாயத்தாற் கடமிலதாகாமற் போதலமையாது. கடம்போலும் தோற்றின தோற்றமிலதாய்ப் போயதன்றிக் கடமான பொருளிருந்தில்லாமற் போயதன்று; அற்றாகலின், 'இல்லதில்லதே' 'உள்ளதுள்ளதே' இலதை யுளதாக்கவும் உள்ளதை இலதாக்கவும் யாவரானு மாகலறிதென்க. இனி "இல்லது வாராது" என்பதுண்மையேனும் இல்லாத கடம் உளதாதலில்லை. காரியமான கடம் வனைவதற்கு முன்னர் காரண வடிவாக நின்று காரியப்படுங்கால் வெளிப்பட்டதெனின் காரியப்படுஞான்றும் மண்ணன்றிக் கடமென்னும் சொற்குப் பொருளின்மையானுங் காரணமான மண்ணினுங் கடமின்மையானுங் கடமென்பதின்றே யென்றையமின்றிக் கூறத்தகுமன்றே. கடமுளதாய வழியன்றா காரணத்தி னிகழ்வதென்றாவது கூறத்தகும். ஒருவர் மற்றொருவர்பாற் பேசாநின்று சிறிது ஞான்று வேறு காரியத்தி லிருந்து பின்னரவரைக் கண்டவழிக்காணாமை நிகழின் அவரில்லின் கணல்லது வேறிடத்திலிருப்பரென் றனுமானிக்க விடமுளதன்றே. அவரைப்பேசியிராவழி யவர் மேலையிடங்களி லிருப்பரென் றெங்ஙன மனுமானிக்கற்பாலது? அதுபோற் கடமுளதாகக் கண்டிருப்பேமெனின் கடமில்லாத வழிக்காரணமான மண்ணின்கணடங்கி யிருக்கலாமென் றனுமானிக்கத்தகும். அங்ஙனம் எத்துணையுமின்மையான கடமின்றென்றே கூறத்தகும். இதனானே கடமண்ணின் கணிருக்கவு மின்றென்றும் வெளிப்படவு மின்றென்றுங் கருதப்பட்டதென்க.

பொருள்களிரண்டு மோரிடத்தின்க ணிருப்பதாகாது. ஒன்று வேறொன்றினுக்கு மேலாகவேனுங் கீழாகவேனும் பக்கமாகவேனு மிருக்கவேண்டும். மண்ணுங்கடமு முளவாயின் மண்ணினுக்குக்கடம் யாண்டையுள்ளது? யாண்டேனு முளதாயின் மண்ணினுக்கு வேறாகவே யிருக்கவேண்டும்; அங்

னமையின்ருெம். ஒன்றில் வேறென்று நிகழ்வது ஒன்றுண்மையுமொன்று. தோற்றல்மாத்திரமுமாயினமையும். பழுதையின் கண் பாம்பும், கானலின்கணீருட்போல் அற்றேல் அற்றாக. இங்ஙனமே மண்ணின்கண் கடம் தோற்றமேயன்றி பொருளின்றெனறுணர்க. மண்ணின்கண் வளைவு குவிவு முதலிய குணங்களுளவே யெனின் அன்னவையுந் தோற்றமேயாம். அற்றன்றி ஒரு மண்ணேனும் வளையவும் குவியவும் காணப்பட்டதேயன்று. மண்ணனைத்து மொருங்கு சேர்ந்து வளைதல் குவிதன்முதலிய தருமங்களை யெய்திய வெனின், எல்லாமொருங்கு சேர்ந்துண்டாய தருமமொரோவொன்றினுக்குஞ் சிறிது சிறிதாக வேனுங் காணப்பட வேண்டுமன்றே! அவ்வா றின்மையான் மேற்கூறிய தருமங்களையும் பெற்றதேயின்றென்பது துணியப்படு மென்க. இதுகாறும் கூறிப்போந்த நியாயங்களான் காரணமொன்றே முக்காலத்தினு முளதென்பதூஉங், காரியமங்ஙன மில்லதென்பதூஉம், அஃதுஞ் சொன்மாத்திரமு மாமென்பதூஉங் கூறினம். இதனுனே மண் யாண்டுமுளதென்றுங் கடம் யாண்டுமிலதென்றுந் துணியப்பட்டதென்க.

ஒரு பொருளுளதாகவேண்டின் முன்னரில்லாதிருந்தே நிகழவேண்டும் இல்லாதிருந்தது இறந்தகாலத்ததாம். உளதாவதுநிகழ்காலத்ததாம். இறப்பு நிகழ்வு மொன்றெனப்படா. அங்ஙன மாகாதவழி இன்மையாய காலமும் உண்மையாய காலமும் வேறுமன்றே. ஒரேஞான்றின்மையு முண்மையுமாதலியையா. கடத்தோற்ற முளதாமிடத்து கடமிருந்து தோன்றிற்று ? இல்லாது நிகழ்ந்ததா ? என்றுசங்கை நிகழும். ஆண்டை நிகழ்ந்தவழி யிருந்தே நிகழ்ந்ததெனின், இருந்தது தோன்றுவதற் கிடனின்றே; இல்லாததே தோன்றிற்றெனின் இன்மையுண்மையுங் காலவேறுபா டெய்தலின் நிகழ்வின் கணின்மையு முண்மையுங்கூடா. இப்பெற்றியாற் பொருடோன்றற் கிடனின்று. ஒரு பொருளழிவு பாடெய்தவேண்டின் உள்ளதொருபோது மழிவு பாடொருபோது மாதலியையும். அழியுஞான்று இருந்த தழிந்ததா? இல்லாததழிந்ததா? என்ற இக்கடாவினுக் கிருந்த தழிந்ததென்றே விடைகூற வேண்டும். இருப்பதாய வுண்மையும், அழிவதாய வின்மையும் ஒரே ஞான்றியையா. இதனுனே உள் பொருளழிதற்கிடனின்று. "இல்லது வாராது உள்ளது போகாது" என்னு நியாயமே ஈண்டைச்சாலும். (இன்னும்வரும்)

T. V. K. rishnasawmi Sastri Fort Ercde.

உ.

வேலுமயிலுநீதுணை.

தணிகை முருகன்

வேலாயுதப்பத்து.

விருத்தம்.

1. திருவமரலரோற் கன்று தெய்வதக் குடிலை மாற்ற
மருளிய தணிகைச் செவ்வே ளங்கையிற் பொலிந்து வானேர்
இருந்தவ முனிவர் சித்த ரியக்கரை யேவல் கொண்ட
சுருதிசொல் வெற்றி வேலைத் துதிப்பதென் மனக்கு வேலை.

2. மகமதி முன்னு வந்த வானவர்க் கூறு நாடி
தகவொறுத் திடுக்க ணேசெய் தானவ னினத்தை யன்றி
பகவிரித் துறுதி நல்கும் பார்புகழ் தணிகைச் செவ்வேல்
துகளறுங் கொற்ற வேலைத் துதிப்பதென் மனக்கு வேலை.

3. ஆதர வின்றி யன்றங் காதரத் தொடுநெஞ் சின்பான்
மேதகு மன்பி னின்று விமலவோ முருக வென்னு
மாதராட் கருள நேர்ந்த வள்ளிலாந் தணிகைச் செவ்வேள்
சோதிநீள் கதிரின்வேலைத் துதிப்பதென் மனக்கு வேலை.

4. சிந்தனை புரியுங் கீரன் செயலற மாய மொன்று
விந்தையி னியற்றும் பூத வியனுரத் தோடு குன்றை
தந்தவோ ரிமைப்பிற் போழ்ந்து தணிகைவேள் கரத்தி லங்குஞ்
சுந்தர வீர வேலைத் துதிப்பதென் மனக்கு வேலை.

5. ஐங்கரக் களிற்றை யொற்றை யாகிய கரத்த தாக
வங்குறக் காட்டி வள்ளி யன்னையை மணந்து நின்ற
கொங்கிவர் மலர்ப்பூம் பொய்கை கோலஞ்செய் தணிகை மேய
துங்கவன் சத்தி வேலைத் துதிப்பதென் மனக்கு வேலை.

6. வலம்படச் சுழன்று நிற்கும் வரிவடி வினிமை சான்ற
நலம்படு மொழியை யற்றை நாள்குறு முனிக்கு நல்குங்
குலம்படு குரவன்வானோர் குலந்தொழுந் தணிகை வேள்கைத்
துலங்கிடுந் தங்க வேலைத் துதிப்பதென் மனக்கு வேலை.

7. ஏமுற வந்த ரத்தோர்க் கிடுக்கண்செய் தீர லைக்குண்
மாமர வுருப்பு ணர்ந்தோன் மார்பகம் பகப்பி ளந்து
தாமமார் கொற்ற மேய தணிகைவேள் கரத்தி லங்குந்
தோமறும் வடிவின் வேலைத் துதிப்பதென் மனக்கு வேலை.

8. ஆதரத் தடைகு நர்க்கிங் ககத்திருட் படலங் கீறி
மேதகுங் கல்வி முன்னும் வீடுபே றளிக்குங் காவிப்
போதுகண் மூன்று போதும் போதுசெய் தணிகை வேள்என்
தோதக மறுக்கும் வேலைத் துதிப்பதென் மனக்கு வேலை.

9. வீரவேல் தீர வேனல் வெற்றி வேல் கொற்ற வேலா
தாரவேல் தாரின் வேலைச் சத்திவேல் முத்தி வேலை
வாரவே லரக்கர் வேலை வாட்டிய தணிகை வேலைச்
சூரசிங் கார வேலைத் துதிப்பதென் மனக்கு வேலை.

10. மேலையூ ழிரிக்கும் வேலை விமலைதந் தருளும் வேலை
மாலைபோற் செக்கர் வேலை வான்றுய ரகற்றும் வேலைக்
காலன்வந் துற்ற வேலை காத்தருள் தணிகை வேலை
வேலையைத் திரிக்கும் வேலை விழைவதென் மனக்கு வேலை.

கா. நமச்சிவாயன்.

மதுவிலக்கு.

மதுவிலக்கென்பது சற்றேறக்குறைய அனேக ஸ்ரீமான்களறிந்த விஷயமே. லாகிரிதரும் வஸ்துக்களாகிய-கள்ளு, சாராயம், பீர், பிராண்டி உஸ்கி, ஜின் இவைப்போன்ற சிலாக்கியம் பெற்ற சம்பெயின், ரம் என்பவைகளுடன் காஞ்சா, மதத், பங், அபீம், பூரணாதிலேகியம் இன்னமும் - வெறிக்கும்படியான எத்தகையானதும் - பற்றறநீக்க முயல்வதே, குணசீலராகும், (துளசிதாசர் ஒருசாபத்தினால் - காம இச்சையில் சிக்கி எவ்விதமாய் தன் மனைவி மமதாதேவியினால் காமம் நீங்கி பரிசுத்தனானரோ) அம்மேறை இச்சொற்ப புல்லறிவன். புகலுமதை - பழைய பாட்டியாராகிய ஔவை புகன்றமட்டும் நன்மை கடைபிடி என்பதாக முற்றிலும் எவரொருவர் ஷெ வஸ்துக்களை வெறுப்பரோ அவரே எத்தியாதி சிலாக்கியங்கட்கு மன்னாதிமன்ராம். ஷெ லாகிரி வஸ்துக்கள் பஞ்ச பாதகங்களுக்கும் முக்கிய ஜீவாதார நீரூற்றுஎன்பது என்முழுநோக்கம். கொலை, களவு, விபசாரம், காமம் வெகுளி யாவற்றிற்கும் இவைகளே வாயில். மேற்கண்ட வஸ்துகள் உட்கொள்ளவாயில் வைக்கும்போது எதை, நினைக்கிறானோ அது திட்டமாய் முடியும். அஃதாவது கள்ளோ யல்லது சாராயமோ வாயில் வைக்கும்போது இன்று சூதாடவேண்டும் என்றோ அல்லது பலானவன் மகா துரோகி அவனைப்பழுக்கப்பார்க்கவேணுமென்றோ அல்லது இன்னவள் மகாசவுந்திரவதி யவளை இன்று கார்த்திருந்து மோகித்து முடிக்கவேணுமென்றோ அல்லது இன்னவன் பொருளுடைய ஸ்ரீமான் அவனை கன்னமிடவேணு மென்பதாகவோ நினைத்து அதன்படியே செய்யத்துணிகிறானையாலிது எல்லாபொல்லாங்குகளுக்கும் சிறந்த ஆபரணமே என்று முக்காலும் சத்தியமாய் செப்புவோம். இதை யனுசரியாத ஒரு புல்லறிவன் மேற் காட்டிய எவ்விஷயத்திற்கும் இடம் கொடுக்கமாட்டான் என்பது திண்ணம் கடவுள் எந்த மார்க்கத்திலும் இந்த(மதுவை)உட்கொள்ள திருவுளம்பற்றவில்லை. இது நாளும் இன்னும் எத்தனையர்கள் இப்படி குடி கெட்டு போகின்றதும் இன்னம் எத்தனை விதமாய் எந்த பத்திரிகையிலும் எத்தனை புஸ்தகங்களில் பேசினாலும் அவன் கெட்டான் குடிகாரன் எனக்கு இரண்டு திரான் போடு என்பார்களே தவிர மற்றபடி விடார் விடார் இது முக்காலம் சத்தியம். இதற்கு இராஜாதி ராஜனும் மன்னாதிமன்னனுயாகிய நமது மாக்ஷிமை தங்கிய (7-வது எட்வர்ட்) சக்கிரவர்த்தி யவர்கள், இந்த ஏழை இந்தியரின்பால் பக்ஷம் பாராட்டினாப்போல் abkary என்னுமோர் சாராய இலாக்கா ஒன்றை பற்றற நிருத்தி இன்னம் அனந்தங்கோடி யிலாக்காகளில் வேண்டிய வருமானத்தை யபிவிருத்திசெய்து கொள்ளக்கூடும். அப்காரி முற்றிலு மகன்ற உடனே, யேழை எளியவர்களின் குடிக்ஷேமமும் முன்னுக்கு புஷ்களமாகி கீர்த்திப் பெற்ற இராஜாதிராஜன் மேன்மேலும் தழைத்தோங்குவார் இகபரசுகங் கிடைக்கும்.

உரிகம் வேங்கை.

(இன்னும் வரும்)

தேக அபிப்பியாசம்.

நமது தேசத்துச்சிறுவர்கள் இக்காலத்தில் விளையாட்டிலுங்கூட விருப்பமற்றுப் படிப்பிலேயே மிகுந்த ஆசையுற்று அதி ஜாக்கிரதையாய்ப் படித்து பரிக்ஷையில் தேறுவதிலேயே மனம்வைத்திருப்பதைப் பார்க்க அதிக துக்கமும், அதிக சந்தோஷமும் உண்டாகிறது. எங்ஙனமெனில், கல்வித்

தேற்சியிலேயே மனம் வைத்திருப்பதைப் பார்க்கச்சந்தோஷமும், தேகத்தை வலுவுறச் செய்யும்பொருட்டுத் தேகப்பயிற்சிசெய்ய மனம் கொள்ளாதிருப்பதை நோக்க அதிதுக்கமும் உண்டாகிறது.

முற்காலத்தில் கிரேக்கர்கள் படிப்பைக் கொஞ்சமேனும் பாராட்டாமல் தேகப் பயிற்சியிலேயே மிக்கதோர் முயற்சிசெய்து வந்தனர். இக்காலத்திலோ நமது பிள்ளைகள் தேகத்தைக் கொஞ்சமேனும் பாராட்டாமல் சதாகாலமும் தங்கள் மனதுக்கு வேலையிட்டுக்கொண்டு வருகிறார்கள். இவ்விரு பக்ஷங்களையும் நாம் உபேக்ஷை செய்து புத்திக்குத்தக்க வேலையைப் புத்திக்குக்கொடுத்தும், தேகத்துக்குத் தகுந்த வேலையைத் தேகத்துக்குக் கொடுத்தும் வரல்வேண்டும்.

தேகப்பயிற்சியிலேயே மனதைச் செலுத்தித்தேகத்தை வலுவுறச்செய்துமனதைச் சீர்திருத்தாவிடில், அகங்கார மமகாரங்கள் செழித்தோங்கிமன இன்பத்தையும் அமைதியையும் போக்குவதன்றி எண்ணிறந்த தீங்குகளுக்கு நம்மை யாளாக்கிவிடு மென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. அன்றியும், தேகத்தைச் சிறிதேனும் பாராட்டாமல் எப்போதும் படிப்பிலே நம்மனதைச் செலுத்திவரின் நமது புத்தியானது மிக்கதோர் இளைப்படைந்து ஓய்ந்துவிடும். அவ்வண்ணம் ஓய்ந்துவிடுவதினால் ஒருக்கால் புத்திகலங்கிச் சித்தப்பிரமைவந்து நேரிடினும் நேரிடும். இச்சூக்ஷ்மத்தை யறியாத தாய் தந்தையர்கள் அதிசீக்கிரத்தில் தங்கள் பிள்ளைகள் கல்வியென்னும் அபிப்பிராயத்துடன் அரைக்கணமேனும் அவர்களை விளையாட்டிலும் கூடவிடாமல், எந்நேரமும் படித்தவாயும், புத்தகம் பிடித்த கையுமாயிருக்க, நிர்ப்பந்திப்பதை நாம் பலமுறையும் கண்டிருக்கிறோம். இதுமுழுமடமையினாலே தானென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. ஏனெனில், சுவரைச் சுத்தமாக வைத்துக்கொண்டு தானே சித்திரம் எழுதல் வேண்டும்; சுவர்சுத்தமா யில்லாமல் எழுதக்கூடுமோ? அங்ஙனமே நமதுதேகம நல்ல ஸ்திதியி லிருந்தால்தான் புத்தியும் நல்லஸ்திதியிலிருக்கும் இல்லாவிடில் புத்தியும் வலுவுளதாயிராது. சாஸ்திரத்தின் பிரகாரம் சாகாரணமாய வலுவான தேகமுடையவனே வலுவான புத்தியையுமுடைத்தா யிருக்கிறான். இதற்குத் திருஷ்டாந்தம், கொஞ்சகாலத்துக்குமுன் இங்கிலாந்து தேசத்துக்கு முதன்மந்திரியாயும், பார்லிமெந்து மெம்பராயு மிருந்த டப்ளியூ. இ. கிளாஸ்டன் என்னும்பிரபுவே. புத்தியில் அவருக்கு நிகர் ஒருவரு மில்லை தேகவலுவிலும் அப்படியே.

முற்கூறியவாறு புத்தியைமிகவும் உபயோகப் படுத்தித் தேகத்தைச் சிறிதேனும் பாராட்டாத பக்ஷத்தில், புத்திகலங்கிப் பைத்தியம் வாராவிடினும், எண்ணிறந்த வேறு தீங்குகளுண்டாகின்றன. எங்ஙனமெனில், சிறுவயதிலேயே புத்தியை மிகவும் உபயோகப்படுத்தித் தேகத்தை அசட்டைபண்ணி வருவதால் ஒருவனுக்கு வயதுவரும்போது தேகவலுவும் மனோவலுவும் குன்றிச் சந்ததியின்றி, பூரண ஆயுசுகுன்றிச் சிறுவயதிலேயே துர்மரணத்துக் குள்ளாகிறான்.........அங்ஙனமின்றி, பிழைத்திருந்து சந்ததியிருக்குமேயாகில் அக்குழந்தையும் பலஹீனத்தை யடைந்து உலகத்தின் கண்ணுள்ள சகலபிணிகளுக்கும் ஓர் இருப்பிடமாகி ஒருக்கால், அவைகளுக்கு இரையாய் விடினும் ஆய்விடும். இதனால், இம்மையில் தாய் தந்தையர்களுக்குச் சிந்தையையும் துக்கத்தையும் கொடுத்து மறுமையிலும் அவர்களைப் புத் என்னும் நரகத்திற்கு ஆளாக்கிவிடுகின்றது. ஆகையால், நாம்படிப்பைக் கவனிப்பதோடு கூடத்தேக அனுகூலத்தையும், புஷ்டியையும் பாரா

ட்டிவரவேண்டும். அங்ஙனம் செய்வதற்கு, நற்போஜனம், நித்திரை, தேகப் பயிற்சி இம்மூன்றும் ஆவசியகம். தேகவலுவுக்கு போஜனமும் நித்திரையும் ஆவசியகமானதென்பது யாவர்க்கும் தெரிந்த விஷயமாதலால் அவைகளைப்பற்றி யிங்குசொல்வது அவசியகமில்லை. ஆனால், தேகப் பயிற்சியைப் பற்றி அவ்வளவு நம்மவருக்குத் தெரியாததாலும், தேகப்பயிற்சி செய்வதினால் பலம்குறைந்து விடுமென்றும் அனேகர் தங்கள் புதல்வர்க்குப் போதித்துவரப் பலமுறையும் நாம் கேட்டிருப்பதாலும், அதின் உபயோகங்கள் எவையென்று சற்று யோசிப்போம்.

1-வது ஜீரண சக்தியுண்டாக்குகிறது. நாம் உட்கொள்ளும் போஜனத்தைச் சுத்த இரத்தமாய்மாற்றித் தேகத்துக்கு ஒத்தாசையா யிருக்கின்றது. இது அத்தியந்த ஆவசியகமென்பதை யெளிதில் கண்டு கொள்ளலாம். ஓர் எளியகுடியானவனது பிள்ளை அடிக்கடி கஷ்டமானவேலையைச் செய்து தேகத்தை உபயோகப்படுத்திக் கொண்டுவருதலால், எந்தக்கீடினமான வஸ்துவை யுட்கொண்ட போதிலும், அதிசீக்கிரத்தில் அது ஜீரணத்துக்கு வருகிறது. மற்றோர்செல்வன் குமாரன் ஒருவன், சிறிது அதிகமாய்ப் போஜனம் உட்கொண்டால் அது ஜீரணத்துக்கு வாராது அதிக தொந்தரவு கொடுத்துப் பிணிக்கு அவனை ஆளாக்கிவிடுகிறது. ஆகையால், தேகப்பயிற்சி ஜீரண சக்தியை யுண்டாக்குகிறதென்பது விசிதமாகின்றது.

2-வது வேர்வைமுதலான அசுத்தநீரை வெளிப்படுத்துகிறது; தேகத்துக்கு அசௌக்கியத்தை யுண்டாக்குவது அசுத்த நீராதலால், வேர்வை விடாவிடில், நமைச்சல் சிரங்கு முதலான நோய்கள் நம்மைப் பீடிக்கும்.

3-வது தேகத்தினுறுப்புகளைப் பருக்கச் செய்து வலுவாக்குகின்றது. 4-வது தேகவலுவின் மூலமாய் மனோவலுவும் புத்திவலுவும் கொடுக்கின்றது இங்ஙனம், பலவிதத்திலும் தேகசௌக்கியத்தையும், தேகவலுவையும், அதினால் மனோவலுவையும் கொடுக்கும் ஆகையால் தேக அப்பியாசம் (எக்ஸசைஸ்) அவசியம் வேண்டும். யாம் இவ்வாறு எழுதவந்ததை முன்னிட்டுசிறுவர்கள் பள்ளிக்கூடத்திற்குப் போகாமல்சிலம்பைவித்தைப்பழகும் (கொரடி) முதலான யிடங்களுக்குச் சென்று பழகி பாரை நெளித்துக்கொண்டு கெள்ரதையாய் நடந்து வீண் சண்டைக்குத் தொண்டைதட்டித் திரியவேண்டுமென்பதாகக் கொள்ளப்படாது. அவ்வாறு இப்போது செய்தால் போலீசாரால் பிடிக்கப்பட்டு திருடரை யடைக்கும் காராக்கிரகமான ஜெயிலுக்குள்ளாவர்கள். அதன்றியும் தங்கள் குலத்துக்கு ஹீனமுண்டாகும். அவ்வாறு செய்யாது, தேகவலுவைக்கருதி, சாண்டோ எக்ஸசைஸ் முதலிய பல பயிற்சி செய்து வருதல் உத்தமமாம். தேகாப்பியாசத்தாலல்லவா சாண்டோ துரை உலகப் பிரசித்தரானார். பீமன், முதலிய பராக்கிரமசாலிக ளிருந்தாரென்பதற் கையமில்லையல்லவா? ஆண்பிள்ளைக்குத் தான் எழுதினீர் பெண்பாலார்களுக்கு அவசியமில்லையா என்பார்க்கும் சமாதானமாக சிறிது சுருக்கிச் சொல்லுவாம். ஸ்திரீகளுக்குந் தேகபலமிருத்த லவசியம். அவர்கள் வீட்டு வேலையை செவ்வனே செய்து கஷ்டப்படுவதே தேகாப் பியசத்துக்குப் போதுமானதா யிருக்கிறது. சில பணக்காரர் வீட்டுசிறுமிகள் பிரசவகாலத்திலும் மற்றும் நோத்தில் அவஸ்தைப்படுவதும் நோயுறுவதும் போந்த சாக்ஷியாம். கஷ்டப்படும் நாட்டுக்கூலி ஜனங்களுக்கு அவ்வித கஷ்டங்களில்லாதிருப்பதே நன்குணர்த்துகின்றது. தேகபலமற்ற பிரபுக்கள் வீட்டுப்பெண்கள் தங்கள் புருஷர்களுக்கு இல்லௌகிக இன்பத்தில் தகுந்தபடி யில்லாதவர்

களாயிருப்பதினால் அவர்களின் தலைவர்கள் வேசியரை யாசித்து காசு வீசி நாசமாகி யேசப்பட்டு தூசிக்கொப்பாகிறார்கள். காலஞ்சென்ற நமது மகாராணியம்மாளைப் பார்க்கிலும் ஸ்ரீமாட்டியாராவதுண்டா? இல்லையே அந்தம்மாள் தான் வாழ்நாட்களில் செய்து வந்த வீட்டுவேலைகளைச் சரித்திர பூர்வமாகத் தெரிந்திருப்பாம். ஆதலால் ஸ்ரீகளுக்கும் தேகஅப்பியாசம் அவசியம் என்பதே. ப—ர்,

ஒருமுறைபடித்தால்போதும்

நமது பத்திரிகையைப் பெறுமன்பர்கள் நம்மை மற்றகாலத்தில் மறந்திருந்தாலும் வியாசனைக்கண்ட அன்றாவது கியாபகமடைய மாட்டார்களா- என்றால் சந்தா செலுத்தாமல் பத்திரிகை படிக்கிறோமே எங்ஙனம் இது கைக்குவரும். எப்படி நடத்துவார் என்னும் மேம்பாடான குணத்தால் எண்ணிய நல்லோர்கள் இவ்விதம் செய்யார்கள். மூன்றாவது வருடத்தில் இது ஐந்தாவது மாதமானதே. இன்னும் தயவு வரவில்லைபோலும், அன்பர்களே! கவனியுங்கள். கவனியுங்கள். ஏதாவது கட்டாயப்படுத்தினால்நிறுத்தி விட எழுதத்தான் தெரியும்.

அன்பாளராகிய கையொப்பநேயர்களின் சகாயத்தாலும்ஆதரணைக்கர்த்தர்களின் அநுக்கிரஹத்தாலும். 3-வருடமாக நடக்கும் இப் பத்திரிகை விருத்தியாக்க எண்ணுகிறோம். இன்னும் சிலகையொப்பம் சேர்ந்தால் இன்னும் 8-பக்கம் அதிகமாக்க உத்தேசம். கவனித்து வேவ்வேறு சில கையொப்பநேயர்களைச் சேர்மின் அனபர்களே!

இளவரசரும் இளவரசியாரும்

இந்தியாவுக்குச்செய்த விஜயம்.

இதுநல்லசமயம் தவறினால் கிடைப்பதரிது.

இளவரச அரசியாரின் இந்திய சுற்றுப்பிரயாண மென்னும் ஓர்புத்தகம் நம்மால் அச்சிடப்பட்டுவருகிறது. அதில் நமது பிரின்ஸ் ஆப் வேல்ஸ் இளவரசர் இங்கிலாண்டு விட்டுப் புறப்பட்டது முதல் இந்தியாவை விட்டு இங்கிலண்டு சேர்ந்தது வரையில். வெகு இனிமையாகவும் படித்து அறிந்துஅகமகிழ வேண்டிய வண்ணமுமாகவும். எழுதப்பட் டிருக்கிறது. புத்தகம் பெரியதாயிருந்தாலும் விலை சுலபம்தான். தத்தம் இடமிருந்தபடியே இளவரசருக்குச் செய்த ஒவ்வொரு காரியத்தையும் இளவரசரால் செய்யப்பட்ட சகலகாரியத்தையு முணர்ந்துகொள்ள இது உத்தமமான நூல். ஒவ்வொருவரிடமும் அவசியமிருக்கவேண்டியது இப்புத்தகமே. மார்ச்சு மாதம் 30-தேதிக்குள்ளாக பணமனுப்புகிறவர்களுக்கு விலை அணா நாலுதான். தங்கள் பெயர்களை மாத்திரம் அந்த தேதிக்குள்ளாக ரெஜிஸ்டர் செய்து வைக்கிறவர்களுக்கு அணா 6. ஏப்ரல் மாதத்திற்குப் பின் வாங்குகிறவர்களுக்கு விலை அணா எட்டு இதுநல்ல சமயம். தங்கள் அன்பர்களையும் வாங்கும்படி செய்தால நன்மை. பத்திராதிபர்.

ஜனனமரண அறிக்கை எழுதும் அன்பர்களுக்கு அறிக்கை.

ஆதரணை கர்த்தர்கள் தவிர ஏனையோர் 3வரிக்குமேலெழுதினால் வசனத்திற்கு 4-அணா அனுப்பவேண்டும். பாடலாக எழுதி அச்சிட்டால் 4வரி பாட்டொன்றுக்கு அணா 8. எட்டாக முன்பணம் அனுப்பினாலன்றி பிரசுரிக்கப்படமாட்டாது, அன்பர்கள் கவனித்து செய்வார்களாக.

ரகர - றகர - பேதவிளக்கம்.

97-ம் பக்கத் தொடர்ச்சி.

சுற-சுறுமீன்-பால்சுற வென்னேவல்.
சுர-சுரருடைய-தேவருடைய.
சூறல்-தோண்டல்.
சூரல்-பிரம்பு.
சூறன்-மூஞ்சூறு.
சூரன்-ஓர்சுரன், சூரியன், தீ, நாய்.
சூறை-சொன்னை-சுழற்காற்று
சேறல்-நடத்தல்.
சேரல்-கிட்டல்-வியங்கோண்முற்று.
திற-மூடியிருப்பதைத் திறவென்னே
[வல்.
திர்-நிலைமையான.
திறம்-காரணம், குணம், வலி, கூறு
பாடு, குறைநரம்புள்ளவீணை.
திரம்-நிலை.
திறன்-காரணம், குணம்,வலி,போலி
திறம்.
திரன்-நிலை, போலிதிரம்.
திறனின்யாழ்-நெய்தல் யாழ்த்திறம்.
திரனில்யாழ்-நிலையில்லாதயாழ்.
திறை-அரசிறை.
திரை-ஆறு, இடுதிரை, கடல், புனற்
றிரை, அலை.
துற-நீக்கு.
துர-செலுத்து.
துறக்கம்-தேவலோகம்.
துரக்கம்-குதிரை.
துறத்தல்-துறவு, நீங்குதல், நீக்குதல்.
துரத்தல்-செலுத்தல்.
துறவு-நீக்குதல், முனிதல்,துறத்தல்.
துரவு-கிணறு.
தூற-பழிச்சொல்பேச, நீக்கிக்க, ம
ழைதூற.
தூர-தூரத்திலுள்ள.
தேற-ஆற்றிக்கொள்ள.
தேர-பழக, பயில்.
தேறல்-கள், தங்கல், நிச்சயம், வியங்
கோண்முற்று.
தேரல்-பயிலல், பழகல்.
பற-சிறகைக்கொண்டுபற, ஆத்திரப்
படு.
பர-அன்னிய, தெய்வ.
பறம்-மலை.
பரம்-உடல், கடவுள், குதிரைக்கல்லி
ணை, கவசம், பாரம், மிகுதி.
பறம்பு-மலை.
பரம்பு-வரம்பு, கழனிதிருத்தும் பல
கை.

பறவை-அவிட்டநாள், புள், புள்ளிற
கு, வினைமுற்று.
பரவை-இலக்குமிகூத்து, கடல், பர
ப்பு, வினைமுற்று.
பறித்தல்-களைதல், கள்ளல்.
பாறல்-இடபவிராசி, எருது ஓடல்,
பொதியெருது, பொருதல், யங்
கோண்முற்று.
பாரல் - எதிர்மறைப் பொருளில் பா
ரேல்.
பிற-மற்ற, பிறவென்னேவல்.
பிர-எதிர், வேறு.
பிறப்பு-ஜனனம், அச்சம், உற்பத்தி,
நெருக்கம்.
பிரப்பு-பேருண்டி, ஒருகலத்திற் பல்
லுணவின் பரப்பு.
புற-வெளியிலுள்ள, பக்கத்திலுள்ள,
புர-பட்டணத்தைச்சார்ந்த
புறணி-புறம், அபதூறு.
புரணி-ஊன், தோல்.
புறத்தவன்-ஐயனார்.
புரத்தவன்-நகரத்தான்.
புறநீர்மை-ஓர்பண்.
புரநீர்மை-நகரின்றன்மை.
புறந்தரல்-ஓம்பல், தோல்வி, வியங்
கோண்முற்று.
புரந்தரல்-நகரைக் கொடுத்தல், காத்
தல்.
புறம்-வெளி,பக்கம்,பின்புறம், மதில்
முதுகு, வீரம்.
புரம்-இராஜதானி, உடல், ஊர், நக
ரம், மருதநிலத்தூர்.
புறவம்-காடு, குறிஞ்சிநிலம், புறா,
முல்லைநிலம்.
புரவம்=(புரவு + அம்)-காத்தல்.
புறவு-புறா, குறிஞ்சிநிலம், முல்லை
நிலம்.
புரவு-கொடை, காத்தல்.
புறன்-போலி, புறம்.
புரன்-போலி, புரம்.
மற-கொடிய, பாவநிறைந்த.
மர-மரத்தாலாகிய, மரத்தைச்சேர்ந்த
மறங்கோல்-கொடியகோல்.
மரக்கோல்-மொட்டம்பு.
மறச்செறிவு-பாவஅடர்த்தி.
மரச்செறிவு-மரநெருக்கம், சோலை.
மறம்-கொலை, கோபம், நமன், பாவம்
பிணக்கு, வலி, வீரம்.

சமாசாரக்கொத்து.

கல்கட்டாவில் சென்றவாரம் பெரியம்மை நோயால் 143-பேர் மரித்தார்கள்:—பர்ட்வான் மகாராஜா அடுத்த எப்பிரல் மாதம் ஐரோப்பாவுக்குச் செல்வார்:—லார்ட் ஆண்ட்ஹில்லின் குணாதிசயங்களைப்பற்றிப் 'பயோனீர்' ப்பத்திரிகை மிகவும் சிலாக்கியமா யெழுதி யிருக்கின்றது:—கடைசியாய் இம்மாதம் 10-ஆந் தேதியன்றெடுத்த கணக்கின்படி பம்பாயில் மொத்தத்துக்கு 982000 ஜனங்கள் வசிக்கின்றார்கள்:—கல்கட்டாவில் அபேரிக்க ஸ்தானாதிபதியாயிருக்கும் ஜெனரல் பாட்டர்ஸன் மிகவும் வியாதியாயிருக்கிறார்:—கல்கட்டா விக்டோரியா ஞாபகச்சின்ன மண்டபத்தின் சிற்பியாகிய ஸர் வில்லியம் எமர்ஸன் இவ்வாரம் இங்கிலண்டு நோக்கிப் பிரயாணமானார். திருவாங்கூர் மகாராஜா அவர்கள் தம்முடைய தேக சௌக்கியத்தின் நிமித்தம் சிலகாலம் கன்னியா குமரியில் தங்கியிருப்பார்கள்:—ஸ்பெயின்தேசத்தரசருக்கும் பிரின்ஸஸ் என்னாவுக்கும் அடுத்த ஜூன்மாதம் 2-ஆந்தேதியன்று மாடிரிட் என்றவிடத்தில் விவாகம் நடக்கும்:—தென்னாபிரிக்காவில் ராண்டில் "தெற்குராண்டீப்" சுரங்கத்தில் தண்ணீரூற்றெடுத்துப் பெருகி ஆங்கு வேலைசெய்துகொண்டிருந்த 55 காப்பிரிகள் மரித்துப்போனார்கள்:—ஜப்பானியர்களை அலாஸ்கா என்றவிடத்துக்கு வரவொட்டாதபடி தடுக்கவேண்டுமென அமேரிக்கக் காங்க்ரெஸார் ஒரு மசோதா தயாரித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அடுத்த எப்பிரல் மாதம் ரோமில் கூடும் போஸ்டல் காங்க்ரெஸில் மிஸ்டர் விஸ்க் என்பவரும் மிஸ்டர் டோரான் என்பவரும் இந்தியப் போஸ்டாபீஸ் பிரதிநிதிகளாய்ப் பிரசன்னமா யிருப்பார்கள்.

மங்கோலியாவில் வாசஞ் செய்யும் பூரியட்ஸ் என்ற ஜாதியாரின் பிரதிநிதிகள் தங்கள் மதகுருவோடு ஸெயின்ட் பீட்டர்ஸ் பர்க்குக்கு வந்து ருஷியச் சக்கிரவர்த்திக்கு வெகுமதிகள் கொடுத்துத் தங்கள் ராஜ விசுவாசத்துக் கறிகுறியாக உபசாரப் பத்திர மொன்றும் வாசித் திருக்கின்றார்கள்.

டிரான்ஸ்வாலின் விஷயங்களை யறியும்பொருட்டு லார்ட் எல்கின், லார்ட் ரிப்பன், மிஸ்டர் ஆஸ்குயித், மிஸ்டர் ஹால்டேன், மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்ஹில் என்ற ஐவரையும் லிபரல் கவர்ன்மெண்டார் பிரத்தியேகமான கமிஷனர்களாக ஏற்படுத்தி யிருக்கின்றார்களென்று சொல்லப்பட்ட சமாசாரம் பொய்யெனத் தெரிகிறது.

சென்னைப் புதுக்கவர்னராகிய ஸர் ஆர்தர்லாலி அடுத்தமாதம் 8-ஆந்தேதி இங்கிலண்டிலிருந்து சென்னை நோக்கிப் பிரயாணமாவார். இவர் சென்னைவந்து சேருகிறவரையில் ஆனரெபில் மிஸ்டர் ஸ்டோக்ஸ் சென்னைக் கவர்னராக அலுவல் பார்ப்பார்.

ஜப்பானில் தோன்றியிருக்கும் பஞ்சத்துக்கு அந்நிய தேசத்தார்கள் உதவிசெய்தால் அவ்வுதவியை மிகவும் நன்றியறிதலுடனேற்றுக்கொள்வதாக ஜப்பானியக் கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள். இந்தியர்களிச்சமயம் உதவிசெய்வது மிகவும் பொருத்தமுடையதென நாம் மீட்டும் கூறுவோம்.

சென்றவாரம் இந்தியாவில் 5042 பேர்களுக்குப் பிளேக் நோய்கண்டு மரித்தார்கள். வங்காளராஜதானியுள் 1216 பேரும், ஐக்கிய மாகாணங்களில் 1381 பேரும், மத்திய மாகாணங்களில், 659 பேரும், பஞ்சாப்பில் 583 பேரும், பம்பாய் ராஜதானியில் 788 பேரும் மரித்திருக்கின்றார்கள். வரவரப் பிளேக்நோய் விருத்தியாகி வருகின்றது.

பிரான்சு தேசத்தில் கிறிஸ்தவக் கோயில்களின் சொத்துக்களைக் கவர்ன்மெண்டார் ஜாப்தா எடுத்துவரும் விஷயத்தை முன்னிட்டு ஜனங்களுக்கும் போலீஸ் வீரர்களுக்கும் கலகங்கள் நடந்து வருவது நம்நேயர்களுக்குத் தெரியும். வெர்சேல்ஸ் என்றவிடத்திலுள்ள கோயிலில் கலகஞ் செய்ததற்காக வேலையினின்றும் நீங்கிய உத்தியோகஸ்தரொருவருக்கும் ஒரு மாணவனுக்கும் ஆளொன்றுக்கு இரண்டுவருஷக் காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

போலீஸ் கமிஷனர்கள் செய்த சிப்பார்சின் பிரகாரம் போலீஸிலாகா உயர்பதவி உத்தியோகஸ்தர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுப்பதற்கு இந்தியாமந்திரி இணங்கிவிட்டார். ஆனால் புதிதாக எவ்வளவு உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற விஷயம் இன்னும் கவனிக்கப்பட்டுவருகிறது. ஒவ்வொரு மாகாணத்திலும் செய்யப்படவேண்டிய சீர்திருத்தங்களும் இன்னும் கவனிக்கப்பட்டுவருகின்றன. கூடியவிரைவில்எல்லாம்ஒழுங்காய்விடும்.

பம்பாய்ப் பாங்கிலும் வங்காளப் பாங்கிலு மிப்போது வட்டி நூற்றுக்கு ஒன்பது.

இம்மாதம் 17-ஆந் தேதியன்று ராஜப்பிரதிநிதியின் சட்டநிரூபணச் சபை கூடும்.

ஈஸ்ட் இந்தியாரெயில்வேயில் ஹூக்ளியிலிருந்து கட்வா வரை 58-லக்ஷம் ரூபாய்ச் செலவில் ரெயில்வே போடப்பட்டு வருகிறது.

இம்மாதம் முதல்தேதியன்று ஜப்பானியப் பார்லிமெண்ட் கூடியபோது ஜப்பான் தேசத்தின் வரவு செலவு கணக்கு கவனிக்கப்பட்டது.

கோலார் பொன்சுரங்கத்திலிருந்து மார்பகோ என்றவிடம் வரையில் ரெயில் போடலாமாவென்ற ஆலோசனை இப்போது தள்ளிவிடப்பட்டதாகத் தெரிகிறது.

சென்ற புதன்கிழமை யன்று காலை கல்கட்டாவிலுள்ள ராலி கம்பேனியின் கட்டிடத்தில் நெருப்புப் பற்றிச் சுமார் ஐந்து லக்ஷம் ரூபாய் நஷ்டமுண்டாய் விட்டது. மிகவும் கஷ்டப்பட்டு நெருப்பணைக்கப் பட்டது.

சென்னையில் பிளேக் நோய்தோன்றி யிருப்பதால் சென்னைத் துறைமுகமிருந்து செல்லும் கப்பல்கள் ஸிட்டகாங் துறைமுகத்தில் தங்கக்கூடாதெனக் கவர்ன் மெண்டா ருத்திர விட்டிருக்கின்றார்கள்.

அமேரிக்காத் தேசத்தின் பிரஸிடெண்டாக வேண்டுமென முயற்சிசெய்த மிஸ்டர் பிரையன் என்பவர் இன்னும் சிலவாரங்களில் பிலிப்பைன் தீவுகளிலிருந்து இந்தியாவுக்கு வருவாரெனச் சொல்லப்படுகிறது.

பெஜவாடாவிலிருந்து மசூலிப்பட்டணம் வரை ரெயில்போடும்படியாகச் சென்னைக் கவர்ன்மெண்டார் கிருஷ்ணா டிஸ்டிரிக்ட் போர்டாருக்கு 24,25,000 ரூபாய் கடன்கொடுக்கச் சாங்ஷன செய்திருக்கின்றார்கள்.

கல்கட்டாவில் பிரசுரமாகும் "ஸ்டேட்ஸ்மன்" பத்திரிகைக்குக் கவர்ன்மெண்ட் சமாசாரங்கள் யாதொன்றும் தெரிவிக்கப்படக்கூடாதென இந்தியாக் கவர்ன்மெண்டார் செய்த உத்திரவு ரத்தாகி விட்டதாகத் தெரிந்து சந்தோஷப்படுகின்றோம்.

பாமோ என்ற விடமிருந்து மோல்மேன் என்றவிடம் வரையில் ரெயில் போடலாமா என்பதைப்பற்றி ஆலோசிக்கும் படியாகவே ரெயில்வேப் போர்டார் பர்மாவுக்குச் சென்றிருக்கின்றார்கள். இந்த ரெயில்வேபோட்டு முடியுமானால் சீனதேசத்துக்கும் ரெயில் போடுவது எளிதெனச் சொல்லப்படுகிறது.

இச்சென்னையில், வைசூரியின் கொடுமை அதிகமாக விருக்கிறது சூரியனும் காய்ந்துகொல்லுகிறான். பனிமட்டிட்டிருக்கிறது. மழைகிடையாது.

கோலார் மாரிகுப்பம் ஸ்ரீசிவகேசவாதவைத சிற்சபையின் கட்டடம் புதிப்பித்து முடிந்து தைபூசதன்று கும்பாபிஷேகம் நிறைவேறியது.

சாம்பியன்ரீவ்ஸ் அர்ச். அமலோற்பவ லூர்துநாயகியின் பக்த பால்ய ஞானசங்கீத பஜனையின் உப அக்கிராசனாதிபதியை அக்ராசனாதிபதியாக நியமனப்படுத்தினார்கள். பழைய அக்ராசனாதிபதி உபந்யாசக் கர்த்தராக நியமிக்கப்பட்டார்,

புதிதாகச் சிருஷ்டிக்கப் பட்டிருக்கும் வங்காளப் பிரிவினை மாகாணத்துச் சட்ட நிரூபணசபைக்கு மெம்பர்கள் தெரிந்தெடுக்கும் விஷயத்தைப் பற்றிய விதிகள் பிரசுரமா யிருக்கின்றன. மொத்தத்துக்குப் பதினைந்து மெம்பர்கள் தெரிந்தெடுக்கப் படவேண்டும்.

கல்கட்டாவில் சென்ற வியாழக்கிழமை யன்று ஒரு வீட்டில் பெற்றோர்கள் பக்கத்தில் படுத்து நித்திரை செய்துகொண்டிருந்த ஒன்றரை வயதுடைய ஒரு மகமதியக் குழந்தையை நரியொன்று கடித்து முகமெல்லாம் தின்றுவிட்டது. குழந்தை யிப்போது ஆஸ்பத்திரியில் சிகிச்சையிலிருக்கிறது.

கல்கட்டாவில் மிஸ்டர் எவ். ஓ. மான்வெல்லி என்ற ஐரோப்பியர் தம்முடைய கையில் துப்பாக்கி யொன்று வைத்துக் கொண்டு தம்முடைய நாயுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது துப்பாக்கி யெப்படியோ வெடித்து இவருடைய வயிற்றில் குண்டு பாய்ந்து உடனே மரித்துப் போனார். இவருக்கு இரண்டு சிறிய குழந்தைகளுண்டு.

ஜப்பான் தேசத்தின் வடக்குப்பாகத்தில் பஞ்சம் தோன்றி யிருக்கின்றது. சுமார் பத்துலக்ஷம் ஜனங்கள் பட்டினியா யிருக்கின்றார்கள். ஜப்பானியச் சக்கிரவர்த்தி ஐயாயிரம்பவுன் கொடுத்திருக்கின்றார்கள். லண்டனிலுள்ள பிரிடிஷ் ஜனங்கள் சுமார் 5000-பவுன்கள் வரையில் சேகரஞ்செய்திருக்கிறார்கள்.

அல்லகபாத்தில் சென்ற திங்கட்கிழமை யன்று கங்கை நதியில் ஸ்நானம் நடந்தபோது "நீர்பானீஸ்" "நீர்மாசீஸ்" என்ற இரண்டு வகுப்பு இந்துக்கள் 'திகாம்பராஸ்' என்ற மற்றொரு வகுப்பு இந்துக்களுடன் கலகஞ்செய்ய ஆரம்பித்தார்கள். ஆனால் போலீசார் கலகத்தையடக்கிவிட்டார்கள்.

வேல்ஸ் இளவரசியார் சென்னைக்கு வந்ததின் ஞாபகச் சின்னமாக ராஜா ரங்கய்யா அப்பாராவ் பகதூர் என்பவர் சென்னை ராயல் விக்டோரியா கோஷா ஆஸ்பத்திரியில் புதிதாக நோயாளிகளுக்கு ஒரு படுக்கையறை ஏற்படுத்தி அதற்கு வேண்டும் செலவுகளைச் செய்வதாக வாக்குத்தத்தம் பண்ணி யிருக்கின்றார்.

இங்கிலண்டுக்கும் ஜப்பானுக்கு மேற்பட்டிருக்கும் உடன்படிக்கையினால் ஜப்பானியத் தரைச்சேனையைப் பெருக்கவேண்டியது ஜப்பான் கவர்ன்மெண்டாரின் கடமையா யிருக்கின்றதென்றும், இதுபோலவே பிரிடிஷ் கவர்ன்மெண்டாரும் தங்கள் தரைப்படையைப் பலப்படுத்த வேண்டுமென்றும் ஜப்பானியயுத்தமந்திரி கூறினார். இங்கிலண்டானது தன்னுடையதரைப்படையை விருத்திசெய்ய வேண்டுமென ஜப்பான் யுத்தமந்திரி கேட்டுக்கொள்வாரென்றும் சொல்லப்படுகிறது. ஜப்பானியப் பார்லிமெண்டி லிதுவிஷயமாய்ப் பெருத்த வாக்குவாதம் நடைபெற்றதென்றும், ஆகையினாலே பார்லிமெண்ட் உடனே கலைந்து போயிற்றென்றும் தெரியவருகிறது.

விசேடம்.

இனி சட்டாயம் பத்திரிகை மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமையில் வெளியிடப்படுமாகையால் கடிதம் விஷயம் எழுதும் அன்பர்கள் பிரதிமாதத்தின் முதல்தேதிக்குள்ளாக அனுப்ப வேண்டுகிறோம்.

கடிதங்கள்.

விடுகதை.

சீருண்ட மருங்கையர்க்கு வளைகள் விற்ற செம்மலுறை திருச்சைதா புரநன் னாட்டில்
நீரேறத் தலையாகும் வாலுங்கூழை நிற்பதுகீ ழிருகாலு மொருகான் மேலே
சீருடனே யொருகாலி நடக்கும்போது திடமாக விரண்டாட் சுமைசு மக்கும்
வாரணியுங் கொப்புமுள தோடிப் பாயும் வண்மையுள விக்கதையை வழுத்து வீரே.

இவர் யார்?

இந்நெடிய கடல்சூழ்ந்த பூவுலகுக்கு ஓர் திலகம்போன்ற சென்னை நன்னாட்டில் கடந்த 1903ஆம் அக்டோபர்மீ திருவுருக்கொண்டுலவா நிற்கின்றார். அவருக்கு இப்போது வயது மூன்றுதான். அவரோ எனில் சாஸ்திர விற்பனர். சமரசசமய விற்பனர். இலக்கணவிற்பனர். இலக்கிய விற்பனர். வேதாந்தவிற்பனர். தூரசெய்திவிற்பனர். சமரச்ஞான விற்பனர். அன்பர்பால் பண்புடையார். பிரசங்க ரத்நாகர விற்பனர். போலிநாவலர் போன்று எம்மததூஷணமும்செய்யாதவர். இவருலகமெல்லாம்விஜயஞ்செய்வதுபோல் இந்தியாவின் வடமேற்குப் பாதை நோக்கி பிஷாவரிலும் பிரசன்னமாக சன்மானவிற்பனர்கள் எதிர்கொண்டழைத்து மலர்ந்தமுகத்தோடுபசரிக்கின்றார்கள். அவர் சதா பிரியாதிருப்பாராக. பிரிந்தால் நீர் மாதத்திற் கொருமுறை வருகின்றீரே! இரண்டு முறையாவது வரப்படாதா என பலர்கேட்கிறார்கள். இச்சிறுவயதிலேயே அவரிவ்வளவு பிரகாசிப்பதைக் கண்டு இவர் வாஸ்தவத்தில் நன்குடையார் என்று தீர்மானித்தார்கள். இவரின் முழுஅளவை அளப்ப எண்ணி அளக்க இவர் மூன்றுகஜம் இருபத்தைந்தே முக்காலரைக்கால் அங்குல உயரமும், இரண்டுகஜம் பத்தொன்பது அங்குல பருமனுமாய் துலங்குகிறார். இவருக்கு தட்சணையோ வெகுகுறைந்தது கொடுத்தால்போதும். அதாவது ஒருவண்டிதான். இக்கேவலமான ஒருவண்டியைச் சமர்ப்பித் தகமகிழாமல் இலவசத்தில் தரிசனை செய்கிறார்கள் வட்டத்தைக் கெட்டிப்படுத்தும் கட்டர். அவர்களுக்கும் இவர் பிரசன்னமாகி மனங்கோணாது தரிசனை தருகிறார். இவர் யாரே விளம்புவீர்! அன்பர்களே. அஃதுடன் அவர் தீட்சணையைச் செலுத்தாதவர்களும் செலுத்திவிடுத லுத்தமம்.

ஜப்பல்பூர். மு - வடிவேலன்.

மரண அறிக்கை.

பிருங்காசலம் மடுவங்கரை வீதியில் வசித்த, அ. தெய்வசகாயம் அவுல்தார் குமாரத்தி உத்ரியமரியம்மாள் இவ்வருடம் ஜனவரிமீ 31உ புதன்கிழமை காலை $6\frac{1}{2}$-மணிக்கு தாமஸ் என்னும் தன் புத்திரன் முதலியாவரும் துக்கிக்க விண்ணுடு சென்றாள். இவ்வாத்மம் சுகமுற மன்றாடுத லவசியம்.

பிருங்காசலம், T. M. முனிசாமித் தொண்டன்.

பெங்களூர் செயிட் ஜான்ஸ்ஹில் கண்பெக்ஷனர்

ஸ்ரீ. S. C. ஆரோக்கியம் அவர்கள் தேகவியோகப்பா.

சீர்பூத்த திரிசிரப் புரத்திலக மெனவந்து சிறப்பி னோங்கி
நீர்பூத்த பெங்களூர் சென்றஜான்ஸ்ஹில் லதிற்ஷாப்பு நிலைக்கப் பெற்று
பேர்பூத்த குணஸ்லாக்ய வதிபோக்ய மிகுபாக்யம் பிறங்கு வாய்மை
தார்பூத்த ஆரோக்யம் வேள்ஜகப்பற் றற்றுபரஞ் சார்ந்தா ரந்தோ.